**நீதித்துறை நடுவர் மன்றம் எண்.2.திண்டிவனம்.**

**முன்னிலை : திருமதி.M.அபிநயா.,B.A.,B.L.,**

**நீதித்துறை நடுவர் எண்.2. திண்டிவனம்,**

**2026 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09-ம் நாள் வியாழக்கிழமை.**

**ஆண்டு பட்டிகை வழக்கு எண்.20/2011**

**CNR No.TNVP11-000025-2010**

| **வ.எண்** | **விளக்கம்** | : | **விவரங்கள்** |
|---|---|---|---|
| 1 | குற்றமுறையீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | : | காவல் துணைக் கண்காணிப்பாளர்,<br>வணிகவியல் குற்றப்புலனாய்வு பிரிவு<br>காவல் நிலையம், விழுப்புரம்,<br>குற்ற எண்.03/2005,<br>விழுப்புரம் மாவட்டம். |
| 2 | எதிரிகளின் பெயர் மற்றும் முகவரி | : | 1. K. சகாதேவன், (இறந்துவிட்டார்),<br>செயலாளர்,<br>த/பெ. குப்புசாமி, பிரம்மதேசம்<br>தொ.வே.கூ.வங்கி,<br>108. மரக்காணம் ரோடு, மன்னார்சாமி<br>கோயில், திண்டிவனம்.<br><br>2. A. பூபால், வயது 61/2026,<br>உதவி செயலாளர்,<br>த/பெ. ஆதிமூல கவுண்டர்,<br>மானூர், ஆத்தூர் அஞ்சல், திண்டிவனம்.<br><br>3. S. ஏழுமலை, வயது 62/2026,<br>கணக்கர், த/பெ.சுப்புராயன், பிரம்மதேசம்<br>தொ.வே.கூ.வங்கி, குருவாம்பேட்டை,<br>மரக்காணம் ஒன்றியம், திண்டிவனம்<br>வட்டம்.<br><br>4. M. அர்ச்சுனன், (இறந்துவிட்டார்),<br>முதுநிலை எழுத்தர், |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:08:51 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | த/பெ முருகேசன், கோவடி, மொளசூர் அஞ்சல், திண்டிவனம் வட்டம்.<br><br>5. P. வீரன், வயது 54/2026, எழுத்தர், த/பெ. பாண்டுரங்கன், வெள்ளகுளம், பிரம்மதேசம் தொ.வே.கூ.வங்கி, பிரம்மதேசம்<br>அஞ்சல், திண்டிவனம் வட்டம்.<br><br>6. G. வேல்முருகன், வயது 54/2026, காசாளர், த/பெ கோவிந்தன், சொக்கந்தாங்ல் கிராமம், பிரம்மதேசம் தொ.வே.கூ.வங்கி, பிரம்மதேசம் அஞ்சல், திண்டிவனம் வட்டம்.<br><br>7. M. பாலு, வயது 54/2026, சிற்றெழுத்தர், த.பெ. மாணிக்கம், பிரம்மதேசம் தொ.வே.கூ.வங்கி, பிரம்மதேசம் அஞ்சல், திண்டிவனம் வட்டம்.<br><br>8. A. கண்ணன், (இறந்துவிட்டார்) மு.சரக மேற்பார்வையாளர், த/பெ ஆறுமுகம், விழுப்புரம் மா.ம.கூ.வ. மரக்காணம் கிளை, உதவியாளர், 44/2 சன்னதி தெரு, மரக்காணம், திண்டிவனம் வட்டம்.<br><br>9. P.பூபாலன், (இறந்துவிட்டார்) மு.சரக மேற்பார்வையாளர் (ஓய்வு) த/பெ. பாண்டுரங்கன், விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, 9, குறிஞ்சித்தெரு, பிரேம்நகர், பொழிச்சலூர், சென்னை–174.<br><br>10. R.பிரபாகரன், வயது 74/2026, உதவி மேலாளர், த/பெ.ராஜலிங்கம், விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, வானூர் கிளை, 2, நல்லாண்டி |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:08:59 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | மேஸ்திரி தெரு, காராமணிகுப்பம்,<br>பாண்டிச்சேரி.<br><br>11. S. ராஜ்குமார், வயது 79/2026,<br>வட்டக்கள மேலாளர், த/பெ.சம்பத்,<br>விழுப்புரம் மாவட்ட ம.கூ.வங்கி,<br>வேப்பஞ்சாலைத்தெரு,<br>திண்டிவனம் வட்டம்.<br><br>12. V.சம்பத், (இறந்துவிட்டார்) முன்னாள்<br>வட்டகள மேலாளர் (ஓய்வு),<br>த/பெ. விருஷபதாஸ், விழுப்புரம் மாவட்ட<br>ம.கூ.வங்கி, 39, திருவள்ளுவர் நகர்,<br>ரோஷனை, திண்டிவனம்.<br><br>13. S.வெங்கிடசாமி, (இறந்துவிட்டார்)<br>முன்னாள் வட்டக்கள மேலாளர் (ஓய்வு),<br>த/பெ.சிவராமன், விழுப்புரம் மாவட்ட<br>ம.கூ.வங்கி, 1056, பிருந்தா அம்மாள்<br>தெரு, நித்தியானந்தம் நகர், வழுதரெட்டி,<br>விழுப்புரம்.<br><br>14. K.அப்துல்மஜீத், (இறந்துவிட்டார்)<br>முன்னாள் வட்டக்கள் மேலாளர்,<br>த/பெ.காஜாமொய்தீன், விழுப்புரம்<br>மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி, 39/1<br>மேட்டுத்தெரு, விக்கிரவாண்டி,<br>விழுப்புரம் மாவட்டம்.<br><br>15. S. சிதம்பரநாதன், வயது 63/2026,<br>முன்னாள் தலைவர், த/பெ.சுப்பிரமணி,<br>பிரம்மதேசம் தொ.வே.கூ.வங்கி,<br>பிரம்மதேசம் அஞ்சல், திண்டிவனம்<br>வட்டம்.<br><br>16. P. கருணாமூர்த்தி, (இறந்துவிட்டார்),<br>பொன்னுச்சாமி, கூட்டுறவு<br>சார்பதிவாளர்/கள அலுவலர் செஞ்சி, |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:09:16 +0530

| | | | | |
|---|---|---|---|---|
| | | | முன்னாள் தனி அலுவலர், பிரம்மதேசம் தொ.வே.கூ.வங்கி, 5, முனுசாமி தெரு, சிறுகடம்பூர், செஞ்சி வட்டம்.<br><br>17. M. கருணாநிதி, வயது 63/2026, த/பெ. மாரி கவுண்டர், முதுநிலை ஆய்வாளர், துணைப்பதிவாளர் அலுவலகம், திண்டிவனம். முன்னார் தனி அலுவலர், பிரம்மதேசம் தொ.வே.கூ.வங்கி, காலேஜ் ரோடு, மாரிசெட்டி குளம், கலைஞர் கருணாநிதி நகர், திண்டிவனம். | |
| 3 | எதிரிகள் கைது செய்யப்பட்ட அல்லது சரணடைந்த நாள் மற்றும் பிணையில் சென்ற நாள் | : | கைது/சரணடைந்த நாள் | விடுவிக்கப்பட்ட நாள் |
| | | | A1, A5–16.04.2007 | A1, A5–16.04.2007 |
| | | | A2–23.04.2005 | A2–28.04.2005 |
| | | | A3, A4–11.05.2007 | A3, A4–11.05.2007 |
| | | | A6–28.06.2005 | A6–01.07.2005 |
| | | | A7–02.06.2012 | A7–02.06.2012 |
| | | | A8–27.10.2010 | A8–27.10.2010 |
| | | | A9, A12 – | – |
| | | | A10, A11–09.07.2026 | A10, A11–09.07.2026 |
| | | | A13–10.05.2005 | A13–10.05.2005 |
| | | | A14–23.04.2005 | A14–28.04.2005 |
| | | | A15–02.05.2005 | A15–02.05.2005 |
| | | | A16, A17–04.12.2007 | A16, A17–04.12.2007 |
| 4 | குற்றம் நடந்த நாள் | : | 01.01.1993–30.11.2004 | |
| 5 | கோப்பில் எடுத்த நாள் | : | 03.05.2011 | |
| 6 | எதிரிகள் ஆஜராகிய நாள் | : | A2 to A8 & A10 to A17–20.05.2011 | |
| 7 | புகார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 16.11.2010 | |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:09:23 +0530

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | எதிரிகளிடம் பிரிவுகள் 228, 240, 246 அல்லது 251 குவிமுச-ன் கீழ் வினவப்பட்ட நாள் | : | 03.12.2011 | | |
| 9 | குற்றவியல் பல்வகை மனுக்கல் தாக்கல் செய்யப்பட்ட நாள் மற்றும் அதன் இறுதி உத்தரவின் மேலான மேல்முறையீடு எதுவும் இருப்பின் அந்த நீதிமன்றம் குறித்த விபரம் | : | 1. 311 crpc– 13.08.2024<br>Result–Allowed<br>2. 311 crpc– 13.08.2024<br>Result–Allowed<br>3. 311 crpc– 06.03.2026<br>Result–Allowed | | |
| 10 | சாட்சிகளின் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை. | : | **Witness** | **Date of Chief** | **Date of Cross** |
| | | | PW–1 | 25.06.2012 | 10.10.2024, 24.10.2024,27.12.2024 |
| | | | PW–2 | 08.08.2012 | – |
| | | | PW–3 | 08.08.2012 | 04.02.2026 |
| | | | PW–4 | 02.03.2013, 23.02.2016, 04.03.2016, 10.03.2017, 24.03.2017, 22.06.2018, 09.08.2019 | 21.06.2025, 24.10.2025, 23.01.2026, |
| | | | PW–5 | 04.08.2023 | – |
| | | | PW–6 | 04.08.2023 | 17.12.2025 |
| | | | PW–7 | 04.08.2023 | – |
| | | | PW–8 | 05.01.2024 | 05.01.2024 |
| | | | PW–9 | 27.06.2024 | 27.06.2024 |
| | | | PW–10 | 13.02.2026 | 13.02.2026, 07.03.2026 |
| | | | PW–11 | 08.05.2026 | 08.05.2026 |
| | | | PW–12 | 26.05.2026 | 26.05.2026 |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:09:29 +0530

| | | | |
|---|---|---|---|
| 11 | சான்றுபொருள் | : | இல்லை |
| 12 | எதிரிகளிடம் பிரிவு 313(1) (ஆ) குவிமுசவின் அல்லது 351(1)(ஆ) BNSS–ன் கீழ் வினவப்பட்ட நாள் | : | 02.06.2026 |
| 13 | விசாரணை முடிக்கப்பட்ட நாள் | : | 05.06.2026 |
| 14 | எதிரி தலைமறைவாக இருந்த நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நாள் | : | – |
| 15 | மேல் நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட தடை மற்றும் இறுதி உத்தரவு குறித்த விவரம். | : | – |
| 16 | எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் | : | 1, 15, 16, 17–ம் எதிரிகள் மீது பிரிவுகள் 120B r/w 408 & 408, 467, 468, 477(A), 471 IPC ன் கீழும், 2 முதல் 14 வரையிலான எதிரிகள் மீது பிரிவுகள் 120B r/w 408 & 408, 467, 468, 477(A), 471 r/w 109 IPC ன் கீழும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. |
| 17 | சட்டப்பிரிவுகள் | : | பிரிவுகள் 120B r/w 408 & 408, 467, 468, 477(A), 471 r/w 109 IPC |
| 18 | தீர்ப்புரை | : | முடிவாக, 2, 3, 5, 6, 7, 10, 11–ம் எதிரிகள் பிரிவுகள் 120B r/w 408 & 408, 467, 468, 477(A), 471 r/w 109 IPC–ன் கீழும், 15, 17–ம் எதிரிகள் பிரிவுகள் 120B r/w 408 & 408, 467, 468, 477(A), 471 IPC–ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானிக்கப்பட்டு மேற்படி பிரிவுகளிலிருந்து எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும், 1, 4, 8, 9, |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:09:37 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | 12, 13, 14, 16−ம் எதிரிகள் இறந்துவிட்ட காரணத்தினால் அவர்கள் மீதான குற்றச்சாட்டு அற்றுபோய்விட்டது. |

இவ்வழக்கானது கடந்த 03.05.2011−ஆம் தேதி அன்று இந்நீதிமன்றக் கோப்பில் எடுக்கப்பட்டது. அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை−2 அவர்கள் முன்னிலையாகியும், 11, 12, 13, 14−ம் எதிரிகளுக்காக திரு.Y.அஜ்மல் அலி, B.Sc.,B.L., அவர்கள் ஆஜராகியும், 17−ம் எதிரிக்காக வழக்கறிஞர் திரு.E.கந்தன், M.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், மற்ற எதிரிகளுக்காக திரு.K.அய்யனார், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும் விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட பின்பு வழக்கு ஆவணங்களையும் பரசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

**1.** இவ்வழக்கானது 1−17 எதிரிகள் அங்கத்தினர்களுக்கு தெரியாமலேயே 327 நபர்கள் பெயரில் போலிக்கடன், வங்கி நிதியை கையாடல் செய்ய வேண்டும் என்று கூட்டு சதி செய்து திட்டமிட்டு மேற்படி திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு பிரம்மதேசம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் 31.07.1991 முதல் 12.02.2004 வரை உள்ள இடைப்பட்ட காலத்தில் தொடர்ச்சியாக 1−வது எதிரி அங்கத்தினர்கள் கடனை முழுமையாக பைசல் செய்த பின்பு அவருக்கு தெரியாமல் மீண்டும் அவர்கள் பெயரில் கடன் வழங்கியதாக பொய் கணக்கு எழுதியும், 2 முதல் 7 எதிரிகள் கடன் பதிவேடு, தினப்பேரேடு, சிட்டா, பொதுப்பேரேடு ஆகியவைகளை எழுதியும், 8 முதல் 14 வரையிலுள்ள எதிரிகள் கடன் மனுக்களை பரிந்துரை செய்தும், 15, 16, 17 ஆகிய எதிரிகள் கடனை வழங்க தீர்மானம் இயற்றியுள்ளார்கள். எனவே, 1 முதல் 17 எதிரிகள் சேர்ந்து மேற்கண்ட குற்றமுறு செயல்கள் மூலம் வங்கிநிதி ரூ.8042373/−ஐ கையாடல் செய்து குற்றமுறு செயல் புரிந்துள்ளார்கள் என்று எதிரிகள் மீது விழுப்புரம்,

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:09:43 +0530

வணிகவியல் குற்றப்புலனாய்வுப்பிரிவு காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** இவ்வழக்கின் இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யும் முன்னரே இவ்வழக்கின் 1–ம் எதிரியான சகாதேவன் என்பவர் இறந்துவிட்டார் என்று இறுதி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், நீதிமன்றத்தின் மூலம் எதிரிகளுக்கு சம்மன் சார்வு செய்ய சென்ற போது இவ்வழக்கின் 9–ம் எதிரி பூபாலன் என்பவர் இறந்துவிட்டார் என்பதை அறிந்து, பின்னர் இந்நீதிமன்றத்தில் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கில் உள்ள மற்ற எதிரிகளுக்கு நீதிமன்றத்தின் மூலம் கு.வி.மு.ச பிரிவு 204–ன் கீழ் அழைப்பாணை சார்வு செய்யப்பட்டு எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகிய போது அரசு தரப்பு வழக்கு ஆவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3.** இவ்வழக்கின் இறுதி அறிக்கையும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் பரிசீலனை செய்து வாதி தரப்பும் எதிரிகள் தரப்பும் கேட்கப்பட்டு எதிரிகள் குற்றம் செய்திருக்கிறார் என்று அனுமானிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருக்கிறது என்பதால் 2 முதல் 8 மற்றும் 10 முதல் 14 வரையிலான எதிரிகள் மீது பிரிவுகள் 120(B) r/w 408 & 408, 467, 468, 477A, 471 r/w 109 IPC–ன் கீழும், 15, 16, 17–ம் எதிரிகள் மீது பிரிவுகள் 120(B) r/w 408 & 408, 467, 468, 477A, 471 IPC–ன் கீழும் குற்றச்சாட்டு வனையப்பட்டு அக்குற்றச்சாட்டை எதிரிகளுக்கு படித்து காட்டி விளக்கி வினவியபோது எதிரிகள் பொய் வழக்கு என்றும் குற்றவாளிகள் இல்லை என்றும் மறுத்து விசாரணை செய்ய வேண்டும் என்றும் கூறினார்கள். எனவே, அதைத் தொடர்ந்து வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

**4.** இவ்வழக்கு நிலுவையில் இருந்தபோது இவ்வழக்கின் எதிரிகளான 4.அர்ச்சுணன், 8.கண்ணன், 10.பூபாலன், 12.சம்பத், 13.வெங்கடசாமி,

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:09:49 +0530

14.அப்துல் மஜித், 16.கருணாமூர்த்தி ஆகியோர்கள் இறந்துவிட்டனர் என்று அரசு தரப்பில் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**5.** அரசு தரப்பில் இவ்வழக்கில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.12 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.314 வரையிலான சாண்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சாண்றுபொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. மேலும், அ.சா.1–ன் குறுக்கு விசாரணையின் போது எதிரிகள் தரப்பில் எ.சா.ஆ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களின் வரிசைஎண் தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, ஆவணங்களின் எண் கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்படுகிறது.

**5.1.** இவ்வழக்கில் 02.12.2004 ல் தாக்கல் செய்த குறைபாடுகள் குறித்த தொகுப்பு அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், இனம் 1ல் பக்கம் 25 முதல் 35 வரை உள்ள கடன் விவரங்கள் அ.சா.ஆ.6 ஆகவும், இனம் 1ல் பக்கம் 57 முதல் 63 வரை உள்ள கடன் விவரங்கள் அ.சா.ஆ.7 ஆகவும், பக்கம் 65ல் சிட்டா இல்லாமல் கடன் வழங்கியது தொடர்பான அறிக்கை அ.சா.ஆ.8 ஆகவும், 17.12.2004 அன்று தாக்கல் செய்த குறைபாடுகள்தொகுப்பு அறிக்கை அ.சா.ஆ.9 ஆகவும், 370 நபர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கடன் வழங்கப்பட்ட விவரங்களின் அறிக்கை (பக்கம் 3 முதல் 85 வரை) அ.சா.ஆ.10 ஆகவும், சங்க செயலாளர் மீது குற்றவியல் நடவடிக்கை தொடரவேண்டி தமிழ்நாடு கூட்டுறவு சங்க சட்டப்பிரிவு 81(சு)–ன் கீழ் வழக்கு பதிய அனுமதி கோரிய அறிக்கை அ.சா.ஆ.11 ஆகவும், ஆவணங்களில் கண்ட குற்றமுறு செயல்கள் சம்பந்தப்பட்ட சாட்சிகள் 400 பேர்களை விசாரித்து பதிவு செய்த வாக்குமூலங்கள் அ.சா.ஆ.12 ஆகவும், பிரம்மதேசம் தொடக்க வேளாண்மை வங்கியானது 26.06.1970 இல் பதிவு செய்யப்பட்டு 28.06.1970 முதல் செயல்பட தொடங்கியதற்கான துணை விதி நகல் அ.சா.ஆ.13 ஆகவும், கேசவபிள்ளையுடைய கடன் குறிப்பு அ.சா.ஆ.14 ஆகவும், வெங்கட சுப்புவின் கடன் குறிப்பு அ.சா.ஆ.15 ஆகவும், ஏழுமலையின்

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:09:54 +0530

கடன் குறிப்பு அ.சா.ஆ.16ஆகவும், கிருஷ்ணனின் கடன்குறிப்பு அ.சா.ஆ.17 ஆகவும், பாலசுப்பிரமணியின் கடன் குறிப்பு அ.சா.ஆ.18 ஆகவும், மாரிக்கவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.19 ஆகவும், லோகாம்பாள் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.20 ஆகவும், கிளியம்மாள் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.21 ஆகவும், ஜெயராமபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.22 ஆகவும், சுப்ரமணியநாயுடு என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.23 ஆகவும், அரிராகவன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.24 ஆகவும், கோவிந்தராஜ் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.25 ஆகவும், ராதாகிருஷ்ணன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.26 ஆகவும், ஏழுமலை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.27 ஆகவும், ஏழுமலை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.28 ஆகவும், கணேசன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.29 ஆகவும், நாதமுனி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.30 ஆகவும், முத்துகிருஷ்ணன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.31 ஆகவும், வாசுதேவன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.32 ஆகவும், பெருமாள் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.33 ஆகவும், முருகேசன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.34 ஆகவும், சஞ்சீவிநாயுடு என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.35 ஆகவும், சிவகண்டன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.36 ஆகவும், குமார் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.37 ஆகவும், ரங்கநாதன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.38 ஆகவும், சுப்பிரமணியன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.39 ஆகவும், ஆறுமுகம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.40 ஆகவும், பாண்டுரங்கப்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.41 ஆகவும், ஜெயபால்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.42 ஆகவும், மணிகண்டன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.43 ஆகவும், தங்கராஜ் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.44 ஆகவும், தாமோதரன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.45 ஆகவும், நாச்சியப்பன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.46 ஆகவும், தமிழ்செல்வம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.47 ஆகவும், அர்ச்சுனகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.48 ஆகவும்,

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:10:02 +0530

முனுசாமிபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.49 ஆகவும், கண்ணபிரான் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.50 ஆகவும், ஆவணங்களின் எண்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

**5.2.** மேலும், ஜானகிராமன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.51 ஆகவும், அலமேலு என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.52 ஆகவும், மாணிக்க அம்மாள் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.53 ஆகவும், அன்னம்மாள் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.54 ஆகவும், ரங்கநாதன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.55 ஆகவும், அலமேலு என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.56 ஆகவும், எத்திராஜ் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.57 ஆகவும், ராமமூர்த்தி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.58 ஆகவும், ராமசந்திர ரெட்டியார் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.59 ஆகவும், ஜெயபால்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.60 ஆகவும், பாவாடை ஆச்சாரி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.61ஆகவும், வேணுபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.62 ஆகவும், கலைச்செல்வி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.63 ஆகவும், குப்பம்மாள் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.64 ஆகவும், வாசுதேவன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.65 ஆகவும், குப்பம்மாள் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.66 ஆகவும், பெரியசாமிபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.67 ஆகவும், பெரியசாமிபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.68 ஆகவும், ஆறுமுகம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.69 ஆகவும், கிருஷ்ணவேணி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.70 ஆகவும், பாலு என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.71 ஆகவும், வசந்தா அம்மாள் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.72 ஆகவும், சுப்ரமணி அய்யர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.73 ஆகவும், கலா என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.74 ஆகவும், துளசிலிங்கம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.75 ஆகவும், தட்சிணாமூர்த்திகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.76 ஆகவும், ராமதாஸ் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.77 ஆகவும், கண்ணுதுரை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.78 ஆகவும்,

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:11:00 +0530

ராஜகுமாரி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.79ஆகவும், மஞ்சினிகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.80 ஆகவும், ராமதாஸ் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.81 ஆகவும், ஏழுமலை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.82 ஆகவும், ஆறுமுகம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.83 ஆகவும், பாண்டுரங்கப்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.84 ஆகவும், நடேசகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.85 ஆகவும், குமார் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.86 ஆகவும், விஜயபாபு என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.87 ஆகவும், முருகேசகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.88 ஆகவும், கண்ணன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.89 ஆகவும், குப்புசாமி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.90ஆகவும், மணிவண்ணப்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.91 ஆகவும், காளிதாஸ் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.92 ஆகவும், கிருஷ்ணவேணி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.93 ஆகவும், மஞ்சிகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.94 ஆகவும், ஜெயச்சந்திரன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.95 ஆகவும், ராஜசேகரன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.96 ஆகவும், ஜெயபால்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.97 ஆகவும், கந்தசாமிகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.98 ஆகவும், கிருஷ்ணமூர்த்தி நாயுடு என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.99 ஆகவும், தட்சிணாமூர்த்தி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.100 ஆகவும், ஆவணங்களின் எண்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

**5.3.** மேலும் முனுசாமிபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.101 ஆகவும், கிருஷ்ணமூர்த்தி நாயுடு என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.102 ஆகவும், கார்த்திகேயன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.103 ஆகவும், தமிழ்செல்வன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.104 ஆகவும், வேணுபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.105 ஆகவும், லோகநாதபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.106 ஆகவும், அப்பாசாமி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.107 ஆகவும், அறிவழகன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.108

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:11:05 +0530

ஆகவும், கண்ணன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.109 ஆகவும், லஷ்மிநாராயணரெட்டியார் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.110 ஆகவும், ராதாகிருஷ்ணன்என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.111 ஆகவும், ஆறுமுககவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.112 ஆகவும், மணிவண்ணப்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.113 ஆகவும், ஆறுமுகம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.114 ஆகவும், கோதாண்டராமன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.115 ஆகவும், சரோஜா என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.116 ஆகவும், அன்னம்மாள் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.117 ஆகவும், சின்னசாமி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.118 ஆகவும், மணி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.119 ஆகவும், ராஜேஸ்வரி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.120 ஆகவும், ஏழுமலை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.121 ஆகவும், எத்திராஜ் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.122 ஆகவும், பாலு என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.123 ஆகவும், சுந்தரமூர்த்தி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.124 ஆகவும், முத்துகிருஷ்ணன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.125 ஆகவும், புருஷோத்தம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.126 ஆகவும், தேவநாதன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.127 ஆகவும், அரிராகவன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.128 ஆகவும், முனுசாமிபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.129 ஆகவும், விஸ்வநாத முதலியார் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.130 ஆகவும், ராமபத்திரன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.131 ஆகவும், பெருமாள் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.132 ஆகவும், சரோஜா என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.133 ஆகவும், காளியப்பன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.134 ஆகவும், சுந்தரம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.135 ஆகவும், சீத்தாராமன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.136 ஆகவும், வேம்பன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.137 ஆகவும், பெரியசாமி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.138 ஆகவும், நாச்சியப்பன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.139 ஆகவும், வாசுதேவன்

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:11:11 +0530

என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.140 ஆகவும், கனகராசுகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.141 ஆகவும், கணேசகவுண்டர்என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.142 ஆகவும், பெருமாள்கவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.143 ஆகவும், பலராமன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.144 ஆகவும், பாலகிருஷ்ணன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.145 ஆகவும், முனுசாமிபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.146 ஆகவும், உசேன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.147 ஆகவும், நடராஜ் நாயுடு என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.148 ஆகவும், சோலையபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.149 ஆகவும்,கோதாண்டராமன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.150 ஆகவும், ஆவணங்களின் எண்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

**5.4.** மேலும், வடிவேல் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.151 ஆகவும், சுதா என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.152 ஆகவும், கண்ணகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.153 ஆகவும், சதாசிவம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.154 ஆகவும், ராஜாராம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.155 ஆகவும், சடகோபன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.156 ஆகவும், தாமோதிரன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.157 ஆகவும், ராஜேந்திரன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.158 ஆகவும், கண்ணபிரான் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.159 ஆகவும், சாமிகண்ணுபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.160 ஆகவும், தமிழ்செல்வி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.161 ஆகவும், ராணி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.162 ஆகவும், அரிராகவன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.163 ஆகவும், வெங்கடேசன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.164 ஆகவும், விஜயபாபு என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.165 ஆகவும், பத்மாசனி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.166 ஆகவும், சுப்ரமணி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.167 ஆகவும், சீனுவாசன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.168 ஆகவும், ஏழுமலை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.169 ஆகவும், வேல்முருகன் என்பவரின் கடன் குறிப்பு

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:11:17 +0530

அ.சா.ஆ.170 ஆகவும், பழனி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.171 ஆகவும், குப்புசாமிபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.172 ஆகவும், சடகோபன்ரெட்டியார் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.173 ஆகவும், பாலகிருஷ்ணன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.174 ஆகவும், ராஜாராம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.175 ஆகவும், சாமிகண்ணுபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.176 ஆகவும், ராமச்சந்திரன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.177 ஆகவும், சுப்ரமணிகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.178 ஆகவும், உலகநாதன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.179 ஆகவும், சின்னையன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.180 ஆகவும், குள்ளகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.181 ஆகவும், தாமோதிரன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.182 ஆகவும், மண்ணாதகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.183 ஆகவும், அப்பாசாமி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.184 ஆகவும், அன்னம்மாள் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.185 ஆகவும், நாகலட்சுமி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.186 ஆகவும், எல்லப்பன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.187 ஆகவும், கண்ணன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.188 ஆகவும், மணி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.189 ஆகவும், செல்வமணி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.190 ஆகவும், ரமேஷ் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.191 ஆகவும், வரதராஜ கவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.192 ஆகவும், நவசிவம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.193 ஆகவும், தருமலிங்கம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.194 ஆகவும், கலா என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.195 ஆகவும், தங்கராஜ் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.196 ஆகவும், ராமசாமி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.197 ஆகவும், கோதாண்டம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.198 ஆகவும், நமச்சசிவாயம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.199 ஆகவும், குமாரகிருஷ்ணன் என்பவரின் கடன்

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:11:22 +0530

குறிப்பு அ.சா.ஆ.200 ஆகவும், ஆவணங்களின் எண்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

**5.5.** மேலும் லஷ்மிநாராயணரெட்டியார் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.201 ஆகவும், முத்துகிருஷ்ணன்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.202 ஆகவும், ஜெயராமன்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.203 ஆகவும்,ராதாகிருஷ்ணன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.204 ஆகவும், ஜானகிராமன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.205 ஆகவும், மாசிலாமணி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.206 ஆகவும், தனசேகரன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.207 ஆகவும், துளசிலிங்கக்ம என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.208 ஆகவும், ரகுபதி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.209 ஆகவும், பாலசுப்ரமணி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.210 ஆகவும், கிளியம்மாள் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.211 ஆகவும், காத்தவராயப்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.212 ஆகவும், நாராயணசாமி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.213 ஆகவும், கோதாண்டராமன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.214 ஆகவும், முருகேசகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.215 ஆகவும், மரியசூசை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.216 ஆகவும், சுந்தரமூர்த்தி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.217 ஆகவும், சுந்தரமூர்த்தி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.218 ஆகவும், வசந்தா என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.219 ஆகவும், மணிவண்ணன்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.220 ஆகவும், ஜெகநாதன் ரெட்டியார் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.221 ஆகவும், மாணிக்கம்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.222 ஆகவும், பத்மாசனி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.223 ஆகவும், தேவராஜ் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.224 ஆகவும், பன்னீர்செல்வம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.225 ஆகவும், சீனுவாச கவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.226 ஆகவும், கலைச்செல்வி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.227

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:12:49 +0530

ஆகவும், கன்னியப்பன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.228 ஆகவும், கிருஷ்ணமூர்த்தி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.229 ஆகவும், ராஜலட்சுமி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.230 ஆகவும், சுந்தரம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.231 ஆகவும், பரசுராமன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.232 ஆகவும், மணிவண்ணன்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.233 ஆகவும், ஏழுமலை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.234 ஆகவும், ஏழுமலை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.235 ஆகவும், ஜெயராமநாயுடு என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.236 ஆகவும், நாகரத்தினம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.237 ஆகவும், ராமலிங்கம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.238 ஆகவும், பலராமன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.239 ஆகவும், ராஜேந்திரன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.240 ஆகவும், கண்ணன்கவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.241 ஆகவும், ஞானசேகரன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.242 ஆகவும், கஸ்தூரி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.243ஆகவும், வனதாட்சி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.244 ஆகவும், கேசவன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.245 ஆகவும், கண்ணன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.246 ஆகவும், நாராயணசாமிரெட்டியார் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.247 ஆகவும், பெரியசாமி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.248 ஆகவும், ராஜகுமாரி என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.249 ஆகவும், ராதாகிருஷ்ணபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.250 ஆகவும் ஆவணங்களின் எண்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

**5.6.** மேலும், திருநாவுக்கரசு என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.251 ஆகவும், பாண்டுரங்கன்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.252 ஆகவும், அன்னம்மாள் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.253ஆகவும், ஏழுமலை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.254 ஆகவும், வேல்முருகன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.255 ஆகவும், ஆறுமுகம்கவுண்டர் என்பவரின் கடன்

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:12:55 +0530

குறிப்பு அ.சா.ஆ.256 ஆகவும், ராஜாராம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.257 ஆகவும், வசந்தா என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.258 ஆகவும், சீனுவாசன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.259 ஆகவும், பெரியகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.260 ஆகவும், வேம்பன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ. 261 ஆகவும், நாராயணசாமிரெட்டியார் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.262 ஆகவும், ரங்கநாதபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.263 ஆகவும், காளிதாஸ் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.264ஆகவும், சுப்புராயன் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.265 ஆகவும், பக்தவச்சலம் என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.266 ஆகவும், சஞ்சீவிநாயுடு என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.267 ஆகவும், சோலையப்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.268 ஆகவும், துரை என்பவரின் கடன் குறிப்பு அ.சா.ஆ.269 ஆகவும், 1303 ரவி எஸ் எம் கடன்.100 27.06.2004, ரூ. 21,000/- குறிப்பு அ.சா.ஆ.270 ஆகவும், 107 நடேசகவுண்டர் பிஎப் கடன் எண். 407 27.06.2004, ரூ.14,000/- குறிப்பு அ.சா.ஆ.271 ஆகவும், 1240 ராமதாஸ் கடன் எண். 1146 28.06.2004, ரூ. 45,000/- கடன் அ.சா.ஆ.272 ஆகவும், 497 விஸ்வநாத முதலியார் கடன் எண். 707, 30.06.2004, ரூ. 20,000/- அ.சா.ஆ.273 ஆகவும், 794 ஏகாம்பரம் என்பவரின் கடன் எண். 463 30.06.2004, ரூ. 00,000/- குறிப்பு அ.சா.ஆ.274 ஆகவும், 893 ஐயோத்தி என்பவரின் கடன் எண். 830, 30.06.2004 ரூ. 18,000/- குறிப்பு அ.சா.ஆ.275 ஆகவும், 1033 கண்ணுதுரை என்பவரின் கடன் எண். 151 30.06.2004 ரூ. 22,000/- அ.சா.ஆ.276 ஆகவும், 1035 ரங்கநாதன் என்பவரின் கடன் எண்.879 30.06.2004, ரூ. 17,000/- அ.சா.ஆ.277 ஆகவும், 1042 ராமச்சந்திரன் என்பவரின் கடன் எண். 883 30.06.2004 ரூ. 17,000/- அ.சா.ஆ.278 ஆகவும், 1049 குள்ளகவுண்டர் என்பவரின் கடன் எண். 765 30.06.2004 ரூ. 15,000/- அ.சா.ஆ.279 ஆகவும், 1065 ஜெயராமநாயுடு என்பவரின் கடன் எண்.402 30.06.2004 ரூ.17,000/- அ.சா.ஆ.280 ஆகவும்,1221ஆதிமூலகவுண்டர் என்பவரின் கடன் எண். 662 30.6.2004 ரூ.

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:13:06 +0530

19,000/−குறிப்பு அ.சா.ஆ.281 ஆகவும், 1112குப்புசாமி என்பவரின் கடன் எண். 324 30.06.2004 ரூ. 14,500/− அ.சா.ஆ.282 ஆகவும், வரிசை எண். 294 உறுப்பினர் 1309 பெயர் ராஜாராம் கடன் எண். 171 30.06.2004, ரூ.21,000/− கடன் பேரேடு பக்கம் 43 அ.சா.ஆ.283 ஆகவும், வரிசை எண். 295 உறுப்பினர் 1336 பெயர் நாகரத்தினம் கடன் எண். 58 30.06.2004, ரூ.7,500/− கடன் பேரேடு பக்கம் 115 அ.சா.ஆ.284 ஆகவும், வரிசை எண். 296 உறுப்பினர் 1359 பெயர் ஜெயராமபிள்ளை, சிறுவிவசாயி கடன் எண். 154 30.06.2004, ரூ.17,000/− கடன் பேரேடு பக்கம் 9 அ.சா.ஆ.285 ஆகவும், வரிசை எண். 297 உறுப்பினர் 1384 பெயர் நமச்சிவாயம் கடன் எண். 379 30.06.2004, ரூ.10,000/− கடன் பேரேடு பக்கம் 161 அ.சா.ஆ.286 ஆகவும், வரிசை எண். 298 உறுப்பினர் 1462 பெயர் ஆண்டாள் கடன் எண். 609 30.06.2004, ரூ.20,000/− கடன் பேரேடு பக்கம் 15 அ.சா.ஆ.287 ஆகவும் ஆவணங்களின் எண்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

**5.7.** வரிசை எண். 299 உறுப்பினர் 1549 பெயர் சிவகண்டன் கடன் எண். 484 30.06.2004, ரூ.20,000/− கடன் பேரேடு பக்கம் 67 அ.சா.ஆ.288 ஆகவும், வரிசை எண். 302 உறுப்பினர் 1649 பெயர் ஜகனாதன் கடன் எண். 871 30.06.2004, ரூ.50,000/− கடன் பேரேடு பக்கம் 227 அ.சா.ஆ.289 ஆகவும், வரிசை எண். 303 உறுப்பினர் 1029 பெயர் முனுசாமிபிள்ளை கடன் எண். 316 14.08.2004, ரூ.31,200/− கடன் பேரேடு பக்கம் 29 அ.சா.ஆ.290 ஆகவும், வரிசை எண். 304 உறுப்பினர் 28 பெயர் புருஷோத்தம ரெட்டியார் கடன் எண். 175 09.03.2004, ரூ.64,000/− கடன் பேரேடு பக்கம் 47 அ.சா.ஆ.291 ஆகவும், வரிசை எண். 305 உறுப்பினர் 814 பெயர் தட்சணாமூர்த்தி கவுண்டர் கடன் எண். 400 09.03.2004, ரூ.65,000/− கடன் பேரேடு பக்கம் 197 அ.சா.ஆ.292 ஆகவும், வரிசை எண். 306 உறுப்பினர் 1236 பெயர் குப்பம்மாள் கடன் எண். 332 09.03.2004, ரூ.42,000/− கடன் பேரேடு பக்கம் 61 அ.சா.ஆ.293 ஆகவும், வரிசை எண். 307 உறுப்பினர் 980 பெயர் சீத்தாராம கவுண்டர் கடன் எண். 144

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:13:17 +0530

10.03.2004, ரூ.29,000/- கடன் பேரேடு பக்கம் 207 அ.சா.ஆ.294 ஆகவும், வரிசை எண். 308 உறுப்பினர் 926 பெயர் அரிவழகன் கடன் எண். 10 10.06.2004, ரூ.21,000/- கடன் பேரேடு பக்கம் 19 அ.சா.ஆ.295 ஆகவும், வரிசை எண். 309 உறுப்பினர் 1074 பெயர் பொன்னுசாமி கடன் எண்.494 10.06.2004, ரூ.27,000/- கடன் பேரேடு பக்கம் 93 அ.சா.ஆ.296 ஆகவும், வரிசை எண். 310 உறுப்பினர் 1391 பெயர் குப்புசாமி கடன் எண். 64 10.06.2004, ரூ.21,000/- கடன் பேரேடு பக்கம் 127 அ.சா.ஆ.297 ஆகவும், வரிசை எண். 311 உறுப்பினர் 518 பெயர் பெருமாள் கவுண்டர் கடன் எண். 906 10.06.2004, ரூ.32,000/- கடன் பேரேடு பக்கம் 299 அ.சா.ஆ.298 ஆகவும், வரிசை எண். 312 உறுப்பினர் 805 ஏ பெயர் ஜெயச்சந்திரன் கடன் எண். 406 10.06.2004, ரூ.64,000/- கடன் பேரேடு பக்கம் 209 அ.சா.ஆ.299 ஆகவும், வரிசை எண். 313 உறுப்பினர் 995 பெயர் ரங்கநாதன் கடன் எண். 352 10.06.2004, ரூ.55,000/- கடன் பேரேடு பக்கம் 101 அ.சா.ஆ.300 ஆகவும், வரிசை எண். 314 உறுப்பினர் 1185 பெயர் பாலு கடன் எண். 19 10.06.2004, ரூ.35,000/- கடன் பேரேடு பக்கம் 37 அ.சா.ஆ.301 ஆகவும், வரிசை எண். 315 உறுப்பினர் 1216 பெயர் அலமேலு கடன் எண். 5286 10.06.2004, ரூ.6,000/- கடன் பேரேடு பக்கம் 149 அ.சா.ஆ.302 ஆகவும், வரிசை எண். 316 உறுப்பினர் 1279 பெயர் தாமோதரன் கடன் எண். 73 10.06.2004, ரூ.19,000/- கடன் பேரேடு பக்கம் 145 அ.சா.ஆ.303 ஆகவும்,வரிசை எண். 317 உறுப்பினர் 1045 பெயர் தேவகி பெரு விவசாய கடன், கடன் எண். 78 10.06.2004, ரூ.53,000/- கடன் பேரேடு பக்கம் 155 அ.சா.ஆ.304 ஆகவும், வரிசை எண். 318 உறுப்பினர் 1593 பெயர் மணிகண்டன் கடன் எண்.210 10.06.2004, ரூ.50,000/- கடன் பேரேடு பக்கம் 117 அ.சா.ஆ.305 ஆகவும், வரிசை எண். 319 உறுப்பினர் 835 பெயர் கணேச கவுண்டர், கடன் எண். 35 11.06.2004, ரூ.21,000/- கடன் பேரேடு பக்கம் 69 அ.சா.ஆ.306 ஆகவும், வரிசை எண். 320 உறுப்பினர் 1334 பெயர் லோகநாதபிள்ளை கடன் எண். 494, 11.06.2004, ரூ.20,000/- கடன் பேரேடு பக்கம் 87 அ.சா.ஆ.307 ஆகவும், வரிசை எண். 321

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:13:23 +0530

உறுப்பினர் 423 பெயர் கந்தசாமி கடன் எண். 909 11.06.2004, ரூ.32,000/– கடன் பேரேடு பக்கம் 305 அ.சா.ஆ.308 ஆகவும்,வரிசை எண். 322 உறுப்பினர் 901 பெயர் நாச்சியப்பன் கடன் எண்.46 11.06.2004, ரூ.40,500/– கடன் பேரேடு பக்கம் 91 அ.சா.ஆ.309 ஆகவும்,வரிசை எண். 323 உறுப்பினர் 1530 பெயர் வேலாயுதம் கடன் எண். 89 11.06.2004, ரூ.50,000/– கடன் பேரேடு பக்கம் 177 அ.சா.ஆ.310 ஆகவும், வரிசை எண். 324 உறுப்பினர் 1666 பெயர் ரவி கடன் எண். 850 12.06.2004, ரூ.41,400/– கடன் பேரேடு பக்கம் 185 அ.சா.ஆ.311 ஆகவும், சட்டப்பிரிவு 81 ன் கீழ் விசாரணை அலுவலரிடம் அளித்த வாக்குமூலத்தில் மேற்கண்ட அங்கத்தினர்கள் தங்கள் பெயரில் கடன் உள்ளது என தெரியாது என்றும், கடனை முடிவுகட்டிய பின் பெறவில்லை எனவும் அளித்த வாக்குமூலங்கள் அ.சா.ஆ.312 ஆகவும்,முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.313 ஆகவும், பிரிவு மாறுதல் அறிக்கை மற்றும் எதிரி நீக்கல் அறிக்கை அ.சா.ஆ.314 ஆகவும், ஆவணங்களின் எண்கள் திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

**6.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சங்கதிகளை தொகுத்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் எதிரிகளிடம் வினவியபோது எதிரிகள் அவர்களது சாட்சியங்கள் அனைத்தும் பொய்யானவை என்று கூறினார்கள். எதிரிகள் தரப்பில் 5–வது எதிரி மற்றும் 10–வது எதிரி எ.சா.1 மற்றும் எ.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டு சான்றாவணங்கள் எ.சா.ஆ.2 மற்றும் எ.சா.ஆ.3 குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், எதிரிகள் தரப்பில் சாண்றுபொருள் எதுவும் முன்னிறுத்தப்படவில்லை.

**7.** இவ்வழக்கில் தீர்மாணிக்கப்படவேண்டிய பிரச்சனை ஏதேனில் எதிரிகள் மீதான குற்றம் அரசு தரப்பால் நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**8. தீர்வு:**

இவ்வழக்கானது 1–17 எதிரிகள் அங்கத்தினர்களுக்கு தெரியாமலேயே 327 நபர்கள் பெயரில் போலிக்கடன், வங்கி நிதியை கையாடல் செய்ய வேண்டும்

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:13:30 +0530

என்று கூட்டு சதி செய்து திட்டமிட்டு மேற்படி திட்டத்தை நிறைவேற்றும் பொருட்டு பிரம்மதேசம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் 31.07.1991 முதல் 12.02.2004 வரை உள்ள இடைப்பட்ட காலத்தில் தொடர்ச்சியாக 1–வது எதிரி அங்கத்தினர்கள் கடனை முழுமையாக பைசல் செய்த பின்பு அவருக்கு தெரியாமல் மீண்டும் அவர்கள் பெயரில் கடன் வழங்கியதாக பொய் கணக்கு எழுதியும், 2 முதல் 7 எதிரிகள் கடன் பதிவேடு, தினப்பேரேடு, சிட்டா, பொதுப்பேரேடு ஆகியவைகளை எழுதியும், 8 முதல் 14 வரையிலுள்ள எதிரிகள் கடன் மனுக்களை பரிந்துரை செய்தும், 15, 16, 17 ஆகிய எதிரிகள் கடனை வழங்க தீர்மானம் இயற்றியுள்ளார்கள் என்றும் எனவே, 1 முதல் 17 எதிரிகள் சேர்ந்து மேற்கண்ட குற்றமுறு செயல்கள் மூலம் வங்கிநிதி ரூ.8042373/–ஐ கையாடல் செய்து குற்றமுறு செயல் புரிந்துள்ளார்கள் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

**09.**அரசு தரப்பு சாட்சிய சாண்றாவணங்களை பரிசீலனை செய்கையில், இவ்வழக்கில் **அ.சா.1 சுப்பிரமணியன்** தனது சாட்சியத்தில், தான் பணிபுரிந்த காலத்தில் 100% ஆய்வு செய்ய தன்னை நியமித்தது குறித்தும் பதிவாளர் உத்தரவின் பேரில் தில்லை வில்லாளன், சக்திவேல் மற்றும் முத்துக்குமரப்பா ஆகியோரை ஆய்வு செய்ய நியமித்ததை குறித்தும், அவர்கள் ஆய்வு செய்த அறிக்கை தாக்கல் செய்ததை குறித்தும், அவர்கள் ஆய்வு செய்ததில் பிரம்மதேசம் கூட்டுறவு வங்கியில் முறைகேடுகள் நடந்திருப்பதாக தெரியவந்தது பற்றியும், அதன் அடிப்படையில் பிரிவு–81 விசாரணை அதிகாரி நியமனம் செய்தது பற்றியும், விசாரணை அதிகாரி தனது விசாரணை முடித்து அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும், அதன் அடிப்படையில் புகார் தயார் செய்து காவல்துறைக்கு அனுப்பியது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

**10**. **அ.சா.2 முத்துக்குமரப்பா** தனது சாட்சியத்தில் பதிவாளர் கூட்டுறவு சங்கம் அவர்களின் உத்தரவு படி 100% பயிர் கடன்களை பரிசீலனை செய்ய தில்லை வில்லாளன் மற்றும் சக்திவேல் ஆகியோருடன் குழுவில் இருந்து

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:13:46 +0530

கடன்களை பரிசீலனை செய்தது குறித்தும், பிரம்மதேசம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் குறைபாடுகள் கண்டறிந்தது குறித்தும், குறைபாடுகள் தொடர்பான அறிக்கையை தாக்கல் செய்ததை குறித்தும், சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.2 முதல் விசாரணை முடிக்கப்பட்டதற்கு பின்னிட்டு அவர் இறந்துவிட்டதாக அவருடைய இறப்பு சான்றிதழ் 29.12.2025 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி காரணத்தினால், அவருடைய சாட்சியம் குறுக்கு விசாரணை செய்யப்படாமலேயே உள்ளது.

11. **அ.சா.3 சக்திவேல்** தனது சாட்சியத்தில் பதிவாளர் கூட்டுறவு சங்கம் அவர்களின் உத்தரவு படி 100% பயிர் கடன்களை பரிசீலனை செய்ய தில்லை வில்லாளன் மற்றும் முத்துக்குமரப்பா ஆகியோருடன் குழுவில் இருந்து கடன்களை பரிசீலனை செய்தது குறித்தும் பிரம்மதேசம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் குறைபாடுகள் கண்டறிந்தது குறித்தும் குறைபாடுகள் தொடர்பான அறிக்கையை தாக்கல் செய்ததை குறித்தும், சாட்சியம் அளித்துள்ளார்.

12. **அ.சா.4 ஆரோக்கியராஜ்** தான் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டது குறித்தும் அதன் அடிப்படையில் தான் விசாரணை மேற்கொண்டது குறித்தும் சாட்சிகளை விசாரணை செய்து அவர்களிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்தது குறித்தும் தான் மேற்கொண்ட விசாரணை அடிப்படையில் 1 முதல் 15 வரையிலான இனங்களில் முறைகேடு இருப்பதாக கண்டறிந்து அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், இந்த இனம்–8 தொடர்பாக 327 அங்கத்தினர் பெயரில் அவர்களுக்கு தெரியாமல் கடன் வழங்கியதாக ரூ.80,42,373/–ஐ பொய் கணக்கு எழுதி கையாடல் செய்து முறைகேடு நடைபெற்றுள்ளது என்பது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. **அ.சா.5 இளங்கோ** சரக மேற்பார்வையாளராக இருந்த பொழுது 2022 அக்டோபர் மாதத்தில் இரண்டு நாட்களும் 2022 டிசம்பர் மாதத்தில் ஒரு நாளும்

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:13:52 +0530

ஆய்வு செய்தது குறித்தும் வசூலிக்கப்பட்ட பங்குத்தொகை குறைவாக இருந்தது குறித்தும் மேற்படி சங்கத்தில் முறைகேடு நடந்திருப்பது குறித்தும் அந்த முறைகேடு தொடர்பாக பொது மேலாளர் விழுப்புரம் மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் மரக்காணம் வங்கிக்கு தெரியப்படுத்தியது குறித்தும் சங்கத்தில் ஏற்பட்ட இழப்பிற்கு செயலாளர் மற்றும் சரக மேற்பார்வையாளர் தான் காரணம் என்பது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.5 முதல் விசாரணை முடிக்கப்பட்டதற்கு பின்னிட்டு அவர் இறந்துவிட்டதாக அவருடைய இறப்பு சான்றிதழ் 29.12.2025 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி காரணத்தினால், அவருடைய சாட்சியம் குறுக்கு விசாரணை செய்யப்படாமலேயே உள்ளது.

**14. அ.சா.6 கிருஷ்ணமூர்த்தி** 1999 ஆம் ஆண்டு கடன் அனுமதியின் பேரில் பிரம்மதேசம் தொடக்க கூட்டுறவு வேளாண்மை வங்கிக்கு பட்டுவாடா செய்தது குறித்தும் 1999 நவம்பர் மாதம் தனது உதவியாளர் குமார் அவர்கள் பிரம்மதேசம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் பட்டுவாடா கோப்புகளில் குறைபாடு இருப்பதாக தன்னிடம் கூறியது குறித்து மே மாதம் 2000 வருடம் மேற்படி பிரம்மதேசம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் கணக்குகளை மத்திய கூட்டுறவு வங்கி மரக்காணம் கிளைக்கு மாற்றம் செய்தது குறித்தும் பிரம்மதேசம் கூட்டுறவு வேளாண்மை சங்கத்திற்கு உட்பட்ட அனைத்து ஆவணங்களையும் தங்கள் வங்கியின் உதவியாளர் மூலம் மரக்காணம் கிளைக்கு ஒப்படைத்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

**15. அ.சா.7 குமார்** நவம்பர் 1999 இல் இருந்து மார்ச் 2000 வரையில் பிரம்மதேச தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் கணக்குகளை பார்க்கும்படி மேலாளர் உத்தரவிட்டது குறித்தும் பிரம்மதேசம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் இருந்து 4 கடன் கோப்புகள் வங்கிக்கு வந்தது குறித்தும் அதனை தான் சரிபார்த்த போது ஒரே நிலத்திற்கு இரண்டு முறை கடன் வழங்கப்பட்டது தெரியவந்தது குறித்தும் மேற்படி குறைபாடுகளை

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:13:58 +0530

மேலாளரிடம் தெரிவித்தது குறித்தும் மேற்படி குறைபாடு தொடர்பாக மேலாளர் டி.பிரம்மதேசம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் செயலாளர் சகாதேவன் என்பவரை கேட்டது குறித்தும் விழுப்புரம் மத்திய கூட்டுறவு வங்கி அனுமதி பேரில் திண்டிவனம் கிளையில் இருந்து டி.பிரம்மதேசம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் இருந்த கணக்குகளை மரக்காணம் கிளைக்கு மாற்றி எடுத்து சென்றுவிட்டது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.7 முதல் விசாரணை முடிக்கப்பட்டதற்கு பின்னிட்டு அவருக்கு கிட்னி சம்மந்தப்பட்ட நோய் ஏற்பட்டு அவருடைய உடல்நிலை மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவரால் எங்கும் பயணம் செய்யமுடியாது என்று மருத்துவச்சான்றிதழ் 13.03.2026 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி காரணத்தினால், அவருடைய சாட்சியம் குறுக்கு விசாரணை செய்யப்படாமலேயே உள்ளது.

**16. அ.சா.8 துரை** என்பவர் பிரம்மதேச தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தங்கள் ஊர் அருகில் உள்ளது குறித்தும் அதில் தான் உறுப்பினராக இருந்தது குறித்தும் அந்த வங்கியில் சுமார் 30 வருடத்திற்கு முன்பு கரும்பு பயிர் வைப்பதற்காக ரூ.8000/– லோன் வாங்கியது குறித்து மறுவருடமே அந்தத் தொகையானது கரும்பு ஆலையில் இருந்து வங்கிக்கு நேரடியாக பணம் அனுப்பி அந்த கடனை பரிசோதனை செய்து வங்கி எடுத்துக்கொண்டு மீத தொகையான சுமார் ரூ.4000/– தன்னிடம் கொடுத்தது குறித்தும் அதன் பின்னிட்டு தான் வங்கி பக்கம் செல்லவில்லை என்பது குறித்தும் வங்கியின் செக்ரட்டரி தன்னுடைய பெயரை பயன்படுத்தி பணம் வாங்கியதாக தெரிந்து கொண்டது குறித்தும் தான் அதன் பின்னிட்டு கடன் எதுவும் வாங்கவில்லை என்பது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

**17. அ.சா.9 சுந்தரமூர்த்தி** கடந்த 4, 5 வருடங்களுக்கு முன்பாக தன்னைக் கூட்டுறவு தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் இருந்து அழைத்து ரூ.15,000/– மற்றும் ரூ.6000/– கடன் தன் பெயரில் வாங்கி உள்ளதாக கூறியது

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:14:05 +0530

குறித்தும் தான் தனக்கு நிலம் எதுவும் பிரம்மதேசத்தில் இல்லை என்றும் தான் கடன் எதுவும் வாங்கவில்லை என்றும் அவர்களிடம் கூறியது குறித்தும் பிரம்மதேசம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் தான் உறுப்பினராக இல்லை என்பது குறித்தும் அவர்கள் விசாரித்த போது மேற்படி சங்கதியை கூறிவிட்டு கடன் வாங்கவில்லை என்று சொன்னவுடன் தன்னை அனுப்பிவிட்டார்கள் என்பது குறித்தும் தனக்கு கையொப்பம் எதுவும் போடத் தெரியாது என்பது குறித்தும் கூட்டுறவு சங்கத்தில் உள்ள சிறு வேலைகளை செய்து தருவது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி அ.சா.9–ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் அவர் தனக்கு கையொப்பம் போடத் தெரியாது என்று சாட்சியம் அளித்துவிட்டு அவரை விசாரணை செய்து நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தில் கையொப்பம் செய்துள்ளார். மேற்படி விவரத்தை பரிசீலனை செய்கையில் அவருடைய சாட்சியம் நம்பத்தகுந்ததா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

18. **அ.சா.10 ஆய்வாளர் விநாயகம்** இவ்வழக்கின் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது குறித்தும் சாட்சிகளை விசாரணை செய்தது குறித்தும் எதிரிகள் பூபால் மற்றும் தண்டபாணி ஆகியோரை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியது குறித்தும் 1–வது எதிரியான சகாதேவன் வீட்டில் இவ்வழக்கு சம்பந்தமான ஆவணங்களை மறைத்து வைத்திருப்பதாக தனக்கு தகவல் கிடைத்ததை அடுத்து நீதிமன்ற உத்தரவு பெற்று 1–வது எதிரியின் வீட்டை சோதனை செய்து அங்கு இருந்து ஆவணங்களை கைப்பற்றியது குறித்தும் மேல் அதிகாரியின் உத்தரவுப்படி வழக்கு கோப்பை திரு.பன்னீர்செல்வம் என்பவரின் பார்வைக்கு மேல்விசாரணைக்காக ஒப்படைத்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

**20. அ.சா.11 துணைக்கண்காணிப்பாளர் திரு.கே.பன்னீர்செல்வம்**, ஆய்வாளர் விநாயகம் என்பவரிடமிருந்து வழக்குக் கோப்புகளை மேல்விசாரணைக்கு எடுத்தது குறித்தும் அவரிடம் இருந்து ஆவணங்களை

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:14:11 +0530

பெற்றுப் பரிசீலனை செய்தது குறித்தும் எதிரி வேல்முருகனை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியதை குறித்தும், தான் பணியிடம் மாற்றம் செய்யப்பட்டதால் வழக்கு கோப்பினை துணைக் கண்காணிப்பாளர் ரீட்டா அவர்களிடம் ஒப்படைத்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

**21. அ.சா.12 காவல் துணைக்கண்காணிப்பாளர் திரு.ராமு** இவ்வழக்கில் விசாரணை மேற்கொண்டு இறுதி அறிக்கை தாக்கல் செய்த திருமதி.ரீட்டா என்பவரால் நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலாது என்று மருத்துவச்சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டதால் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி, அவரது சாட்சியத்தில் திருமதி. ரீட்டா வழக்கு கோப்பை திரு.பன்னீர்செல்வம் என்பவரிடமிருந்து பெற்று விசாரணை மேற்பட்டது குறித்தும் இவ்வழக்கில் விசாரணை அதிகாரி மற்றும் மற்ற சாட்சிகளை விசாரணை செய்தது குறித்தும் இவ்வழக்கின் எதிரிகளான இளங்கோ மற்றும் குமரகுருபரன் ஆகியோரை இவ்வழக்கில் இருந்து நீக்கம் செய்து எதிரி நீக்கல் அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தது குறித்தும் பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்தது குறித்தும் பின்னர் அனைத்து விசாரணைகளையும் முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

**22.** எதிரிகள் தரப்பில் தங்கள் வழக்கை நிரூபிக்கும் பொருட்டு எ.சா.1 மற்றும் எ.சா.2 விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். **எ.சா.1 5–வது எதிரியான வீரன்** இந்த வழக்கு சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்க வங்கி ஊழியர்களுக்கு எதிராக துணைப்பதிவாளர் அவர்களால் கூட்டுறவு சங்க தீர்ப்பாயம் விழுப்புரத்தில் வழக்கானது நடைபெறுவது குறித்தும் அந்த வழக்கில் எதிரிகள் ஆகிய அனைவரும் தண்ட வசூல் செலுத்த வேண்டும் என்று தீர்ப்பானது குறித்தும் அந்த வழக்கை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்தது குறித்தும் அந்த மேல்முறையீட்டில் தண்டவசூல் நடவடிக்கையை கூட்டாக எடுக்க முடியாது என்று தங்களுக்கு ஆதரவாக தீர்ப்பு வழங்கப்பட்டதை குறித்தும் மேற்படி

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:14:24 +0530

உத்தரவிற்கு எதிராக துணைப்பதிவாளர் மற்றும் தனி அலுவலர் இருவரும் மாண்புமிகு சென்னை அமர்வில் மேல் முறையீடு செய்தது குறித்தும் அந்த மேல்முறையீட்டு வழக்கில் யாருக்கு எவ்வளவு தொகைக்கான பொறுப்பு உண்டு என்பதை தனித்தனியாக குறிப்பிட்டு தண்ட வசூல் மேற்கொள்ள வேண்டும் என்றும் 4 மாத காலத்திற்குள் நடவடிக்கை மேற்கொண்டு அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் என்றும் உத்தரவு வழங்கப்பட்டது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

**23. எ.சா.2 10–வது எதிரியான பிரபாகரன்** தனக்கு தண்டவசூல் அறிவிப்பு வந்தது குறித்தும், அதனைத் தொடர்ந்து கூட்டுறவு சங்கத் தீர்ப்பாயம் முதன்மை மாவட்ட நீதிமன்றம் விழுப்புரத்தில் வழக்கு எண் 27/2008 வழக்கு நடந்தது குறித்தும், அந்த வழக்கில் பிரம்மதேசம் கூட்டுறவு வங்கியில் இனம் எண் 1 மற்றும் 8ல் தான் எந்த இழப்பீடும் ஏற்படுத்தவில்லை என்று முடிவு செய்யப்பட்டது குறித்தும், மேற்படி உத்தரவை எதிர்த்து பிரம்மதேசம் கூட்டுறவு சங்க துணை அலுவலர் சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது குறித்தும், அந்த மேல்முறையீடு தங்களுக்கு சாதகமாக தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

**24.** இந்த வழக்கில் எதிரிகள் தரப்பின் வாதம் என்னவென்றால், பிரிவு 81 விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்ட நபர், சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்கத்தில் முறைகேடு நடைபெற்ற காலகட்டத்தில் சுமார் இரண்டு ஆண்டுகள் பணியாற்றியவர் என்பதாலும், எனவே அவர் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டது பாகுபாடு கொண்ட நியமனம் எனவும், அதன் அடிப்படையில் அவரது விசாரணை அறிக்கை நம்பகத்தன்மை இழந்ததாகவும் வாதிடப்பட்டுள்ளது.

**25.** இந்த வாதத்தை இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்தது. ஒரு அதிகாரி சம்பந்தப்பட்ட நிறுவனத்தில் முன்பு பணியாற்றியிருந்தது மட்டுமே அவரை விசாரணை அதிகாரியாக நியமிக்கத் தடை விதிக்கும் காரணமாகாது.

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:14:31 +0530

குறிப்பாக துறைசார் அல்லது நிர்வாக விசாரணைகளில், அந்தத் துறையைப் பற்றிய அனுபவம் உள்ள அதிகாரிகள் விசாரணை செய்யப்படுவது நடைமுறையாக உள்ளது. எனினும், இயற்கை நீதி கோட்பாட்டின் அடிப்படையில் விசாரணை அதிகாரி சம்பந்தப்பட்ட முறைகேட்டில் நேரடியாக ஈடுபட்டிருந்தால் அல்லது அந்த முறைகேட்டில் அவருக்கும் சம்பந்தம் இருப்பதாக நிரூபிக்கப்பட்டால், அத்தகைய நியமனம் பாகுபாடு கொண்டதாக கருதப்படலாம். ஆனால் இவ்வழக்கில், விசாரணை அதிகாரி சம்பந்தப்பட்ட காலகட்டத்தில் பணியாற்றியிருந்தார் என்பது மட்டுமே முன்வைக்கப்பட்டுள்ளது. அவர் நேரடியாக குற்றச்செயலில் ஈடுபட்டார் அல்லது தனிப்பட்ட லாபம் பெற்றார் என்பதற்கான எந்த ஆதாரமும் முன்வைக்கப்படவில்லை.

**26.** மேலும், முன் பணியாற்றிய தொடர்பு மட்டும் பாகுபாட்டை நிரூபிக்க போதுமானதல்ல. உண்மையான பாகுபாடு அல்லது நியாயமான சந்தேகத்திற்கு இடமளிக்கும் சூழ்நிலை நிரூபிக்கப்பட வேண்டும். எனவே, முறைகேடு நடைபெற்ற காலகட்டத்தில் அவர் அந்த சங்கத்தில் பணியாற்றியிருந்தார் என்பதைக் காரணமாகக் கொண்டு மட்டுமே அவரது நியமனத்தை சட்டவிரோதம் அல்லது விசாரணை அறிக்கையை செல்லாததாக கருத முடியாது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**27.** இந்த வழக்கில் எதிரிகள் தரப்பின் மற்றொரு வாதம், பிரம்மதேசம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் நிர்வாகக் குழுவில் மொத்தம் 11 உறுப்பினர்கள் இருந்தும், அவர்களில் அனைவரையும் எதிரிகளாக சேர்க்காமல், தலைவர் மட்டும் எதிரியாக சேர்க்கப்பட்டுள்ளதாகவும், இது அரசுத் தரப்பு வழக்கை பாதிக்கும் வகையில் அமைந்துள்ளதாகவும் வாதிடப்பட்டுள்ளது.

**28.** இவ்வாதத்தை இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்தது. குற்றவியல் சட்டத்தில், குற்றச்சாட்டுக்காக அவசியமான நபர்கள் அனைவரையும் சேர்க்காதது என்பது தானாகவே வழக்கை ரத்து செய்யும் காரணமாகாது. குற்றவியல் வழக்கில் முக்கியமானது, ஒவ்வொரு எதிரிக்கு

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:14:37 +0530

எதிராக தனித்தனியாக குற்றம் நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும். கூட்டுறவு சங்கங்கள் போன்ற அமைப்புகளில் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அனைவரும் ஒவ்வொரு முடிவிலும் நேரடியாக ஈடுபடுவார்கள் என்று சட்டம் தானாகவே கருதாது. ஒவ்வொரு உறுப்பினரின் பங்கு, பொறுப்பு, கையெழுத்து, ஒப்புதல் மற்றும் செயலில் ஈடுபாடு ஆகியவை தனித்தனியாக பரிசீலிக்கப்பட வேண்டும். மேலும், குற்றவியல் பொறுப்பு தனிநபர் அடிப்படையிலேயே நிரூபிக்கப்பட வேண்டும். குழு உறுப்பினர் என்ற ஒரே காரணத்தால் அனைவரும் குற்றவாளிகள் என கருத முடியாது.

**29.** இவ்வழக்கில் அரசுத் தரப்பு முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள சாட்சிய, சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, போலிக் கடன்கள் உருவாக்குதல், ஆவணங்களில் போலி பதிவுகள் செய்தல், நிதி பரிவர்த்தனைகளை மாற்றுதல் போன்ற செயல்கள் குறிப்பிட்ட சில அதிகாரிகள் மற்றும் பொறுப்புடைய நபர்களின் நேரடி கட்டுப்பாட்டில் நடைபெற்றதாக தெரிய வருகிறது. மேலும், விசாரணை அதிகாரி (அ.சா.12) தனது இறுதி அறிக்கையில், போதுமான ஆதாரம் இல்லாத காரணத்தால் சில நபர்களை வழக்கிலிருந்து நீக்கியுள்ளார் என்பதும் பதிவாகியுள்ளது. இது விசாரணை முழுமையாக மற்றும் முறையாக மேற்கொள்ளப்பட்டதாக காட்டுகிறது. எனவே, நிர்வாகக் குழுவில் இருந்த அனைத்து உறுப்பினர்களையும் எதிரிகளாக சேர்க்காமல் தலைவரை மட்டும் எதிரியாக சேர்த்துள்ளது அரசுத் தரப்பு வழக்கை பாதிக்கும் வகையில் இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

**30.** இனம் எண் 8 தொடர்பாக, பிரம்மதேசம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் அங்கத்தினர்கள் கடன் பெறவில்லை என மறுத்த 327 நபர்களின் பெயரில் ரூ.80,42,373/- தொகைக்கு கடன் வழங்கப்பட்டதாக போலியான கணக்குகள் மற்றும் பதிவுகள் உருவாக்கப்பட்டு, அதன் மூலம் சங்க நிதி கையாடல் செய்யப்பட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இக்குற்றச்சாட்டின் அடிப்படையில், சங்கத்தின் செயலாளர் திரு.கே. சகாதேவன் மற்றும் அவருக்கு

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:14:44 +0530

உடந்தையாக செயல்பட்டதாக கூறப்படும் உதவி செயலாளர், கணக்கர், எழுத்தர்கள், அலுவலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட வங்கி அதிகாரிகள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

**31.** இந்த குற்றச்சாட்டை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.12 வரை சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். மேலும், கடன் பேரேடுகள், பிரிவு 81 விசாரணை அதிகாரியின் அறிக்கை, காவல்துறையில் அளிக்கப்பட்ட புகார், விசாரணை அதிகாரியால் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், 100% ஆய்வுக்குழுவின் முதல் நிலை அறிக்கை மற்றும் குறைபாடுகள் குறித்த தொகுப்பு அறிக்கை ஆகிய ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. மேற்கண்ட வாய்மொழி சாட்சிகளையும் குறியீடு செய்யப்பட்ட ஆவணங்களையும் பரிசீலனை செய்யும்போது, பிரம்மதேசம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் கடன் வழங்கும் நடைமுறைகளில் குறைபாடுகள் இருந்ததும், சில கடன் கணக்குகள் சந்தேகத்திற்குரிய வகையில் பராமரிக்கப்பட்டதும் தெரியவருகிறது.

**32.** ஆனால், இனம் எண் 8 தொடர்பான முக்கியமான கேள்வி என்னவென்றால், குற்றம் சாட்டப்பட்டுள்ள 327 அங்கத்தினர்களும் உண்மையில் கடன் பெறவில்லையா அல்லது அவர்களின் பெயரில் மட்டும் போலியான கடன் பதிவுகள் உருவாக்கப்பட்டதா என்பதாகும். இந்த அம்சத்தை நிரூபிப்பதற்கு சம்பந்தப்பட்ட கடன் விண்ணப்பங்கள், கடன் பத்திரங்கள், கடன் பெறுநர்களின் ஒப்புதல் ஆவணங்கள், பணம் பெற்றதற்கான ரசீதுகள் மற்றும் கடன் ஆவணங்களில் உள்ள கையொப்பங்கள் ஆகியவை மிக முக்கியமான முதன்மை ஆவணங்களாகும்.

**33.** ஒரு நபரின் பெயரில் கடன் வழங்கப்பட்டதாக சங்க பதிவுகளில் காட்டப்பட்டுள்ள நிலையில், அந்த நபர் உண்மையில் கடன் பெற்றாரா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கு, சம்பந்தப்பட்ட கடன் விண்ணப்பத்தில் உள்ள கையொப்பம், கடன் பெறுநரின் உண்மையான கையொப்பமா என்பதை

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:14:53 +0530

நிரூபிப்பது அவசியமானதாகும். குறிப்பாக, உறுப்பினர்கள் தாங்கள் கடன் பெறவில்லை என்று மறுக்கும் சூழ்நிலையில், அந்த கடன் விண்ணப்பங்களில் உள்ள கையொப்பங்கள் குறித்து கையெழுத்து நிபுணரின் கருத்து பெறப்பட்டு, ஒப்பிட்டு ஆய்வு செய்யப்பட்டிருந்தால், வழக்கின் உண்மை நிலையை கண்டறிய அது முக்கியமான சான்றாக இருந்திருக்கும்.

**34.** இந்த வழக்கில், சம்பந்தப்பட்ட 327 நபர்களின் கடன் விண்ணப்பங்கள் மற்றும் அதிலுள்ள கையொப்பங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அவை சம்பந்தப்பட்ட உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் ஒப்பிட்டு கையெழுத்து நிபுணரின் கருத்து பெறப்பட்டதாக எந்த சாட்சியமும் இல்லை. மேலும், கடன் விண்ணப்பங்களில் உள்ள கையொப்பங்கள் போலியானவை என்பதை அறிவியல் பூர்வமாக நிரூபிக்கும் எந்த நிபுணர் சாட்சியும் அரசு தரப்பில் முன்வைக்கப்படவில்லை.

**35.** பிரிவு 81 விசாரணை அதிகாரியிடம் சில உறுப்பினர்கள் அளித்த வாக்குமூலங்களில் தங்கள் பெயரில் கடன் இருப்பது தெரியாது என்றும், தாங்கள் அந்த கடனை பெறவில்லை என்றும் கூறியுள்ளனர். அந்த வாக்குமூலங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. எனினும், அந்த வாக்குமூலங்கள் மட்டுமே சம்பந்தப்பட்ட கடன்கள் அனைத்தும் போலியானவை என்பதை நிரூபிக்கும் இறுதியான சான்றாக கருத முடியுமா என்பது பரிசீலிக்கப்பட வேண்டியுள்ளது. ஏனெனில், குற்றவியல் வழக்கில் குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க வேண்டிய பொறுப்பு அரசு தரப்பினருக்கு உள்ளது.

**36.** மேலும், செயலாளர் திரு. கே.சகாதேவன், கணக்கர் திரு. சு.ஏழுமலை, எழுத்தர்கள் திரு. ஜி.வேல்முருகன், திரு. பி.வீரன், சிற்றெழுத்தர் திரு. எம்.பாலு, எழுத்தர் திரு. எம்.அர்ச்சுணன் மற்றும் உதவி செயலாளர் திரு. ஆ.பூபால் ஆகியோர்கள் கடன் பதிவுகள் தயாரித்தல், தினப்பேரேடு, சிட்டா, பொதுப்பேரேடு போன்ற பதிவுகளை பராமரித்தல் ஆகிய பணிகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அதேபோல், வங்கி ஆய்வாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:15:00 +0530

அதிகாரிகள் கடன் பரிந்துரை மற்றும் அனுமதி நடவடிக்கைகளில் உடந்தையாக இருந்ததாக கூறப்பட்டுள்ளது.

**37.** இருப்பினும், ஒருவர் சங்கத்தில் ஒரு பதவியில் இருந்தார் என்பதன் அடிப்படையில் மட்டும் அவரை குற்றவாளியாக கருத முடியாது. ஒவ்வொரு எதிரியின் மீதான குற்றப்பங்கு, முறைகேடு நடைபெற்றதை அறிந்திருந்த நிலை, போலியான பதிவுகளில் அவருடைய நேரடி பங்கு மற்றும் அதன் மூலம் ஏற்பட்ட நிதி இழப்புடன் அவருக்கு உள்ள தொடர்பு ஆகியவை தனித்தனியாக உறுதியான சாட்சிகளின் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும்.

**38.** இந்த நிலையில், அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் மூலம் சங்கத்தில் முறைகேடுகள் நடைபெற்றது மற்றும் கடன் வழங்கும் நடைமுறைகளில் கடுமையான குறைபாடுகள் இருந்தது என்பது தெரியவருகிறது. ஆனால், இனம் எண் 8–ல் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கடன்களும் போலியான கடன்கள் என்பதையும், அவற்றை உருவாக்குவதில் ஒவ்வொரு எதிரியும் தெரிந்தே பங்கேற்றனர் என்பதையும் நிரூபிப்பதற்கு தேவையான முதன்மை கடன் ஆவணங்கள் மற்றும் அறிவியல் சாட்சிகள் தாக்கல் செய்யப்பட்டதாக தெரியவில்லை.

**39.** எனவே, கிடைக்கப்பெற்ற வாய்மொழி மற்றும் ஆவண சாட்சிகளை மொத்தமாக பரிசீலனை செய்யும்போது, சங்கத்தில் முறைகேடு ஏற்பட்டிருக்கலாம் என்ற வலுவான சந்தேகம் எழுந்தாலும், குற்றவியல் வழக்கில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட நிரூபணம் இனம் எண் 8 தொடர்பாக ஒவ்வொரு எதிரிக்கும் எதிராக நிரூபணம் செய்யப்படவில்லை.

**40.** இவ்வழக்கில் எதிரிகள் மீது இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 120(B), 408, 467, 468, 471 மற்றும் 477(A) கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன. இப்பிரிவுகளின் கீழ் குற்றம் நிரூபிக்கப்பட வேண்டுமெனில், அரசு தரப்பு ஒவ்வொரு குற்றத்தின் அத்தியாவசிய கூறுகளையும் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க வேண்டும்.

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:15:33 +0530

**41.** இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 120(B)—ன் கீழ் குற்றம் நிரூபிக்கப்பட வேண்டுமெனில், இரு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஒரு சட்டவிரோத செயலைச் செய்ய அல்லது சட்டபூர்வமான செயலை சட்டவிரோதமான முறையில் செய்ய உடன்பாடு கொண்டிருந்தனர் என்பது நிரூபிக்கப்பட வேண்டும். சதித்திட்டம் தொடர்பான குற்றத்தில், வெறும் சந்தேகம், தொடர்பு அல்லது பதவி வகித்த நிலை மட்டும் போதுமானதல்ல. குற்றச்செயலை மேற்கொள்ளும் நோக்கத்துடன் குற்றஞ்சாட்டப்பட்ட நபர்களுக்கிடையே இருந்த குறிப்பிட்ட உடன்பாடு அல்லது ஒருங்கிணைந்த செயல்பாடு ஆதாரங்களால் நிரூபிக்கப்பட வேண்டும்.

**42.** பிரிவு 408—ன் கீழ் குற்றம் நிரூபிக்கப்பட வேண்டுமெனில், குற்றம் சாட்டப்பட்ட நபர் ஒரு பணியாளர் அல்லது எழுத்தர் என்ற நிலையில், அவரிடம் ஒப்படைக்கப்பட்ட அல்லது அவரது கட்டுப்பாட்டில் இருந்த சொத்து அல்லது அதன் மீது இருந்த அதிகாரத்தை நேர்மையற்ற முறையில் கையாடல் செய்திருக்க வேண்டும். வெறும் நிர்வாகப் பொறுப்பு அல்லது பணிச்சுமை இருந்தது மட்டும் போதாது. ஒப்படைக்கப்பட்ட சொத்தை தவறாக பயன்படுத்திய செயல் மற்றும் அதற்கான நேர்மையற்ற நோக்கம் ஆகியவை நிரூபிக்கப்பட வேண்டும்.

**43.** இவ்வழக்கில் அரசு தரப்பு, கூட்டுறவு சங்கத்தில் போலியான கடன்கள் உருவாக்கப்பட்டு, அதன் மூலம் சங்கத்தின் நிதி முறைகேடாக பயன்படுத்தப்பட்டதாகவும், அதில் எதிரிகள் உடந்தையாக செயல்பட்டதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளது. ஆனால், இந்த குற்றச்சாட்டை நிரூபிப்பதற்காக, எதிரிகளுக்கிடையில் குற்றச்செயலை மேற்கொள்ளும் நோக்கத்துடன் உடன்பாடு ஏற்பட்டதை காட்டும் எந்த நேரடி அல்லது சூழ்நிலை ஆதாரமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

**44.** குறிப்பாக, 120(B) பிரிவின் கீழ் குற்றச்சாட்டை நிரூபிக்க, யார் யாருடன் எந்த வகையில் ஆலோசனை செய்து, எந்த சட்டவிரோத செயலை மேற்கொள்ள

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:15:41 +0530

திட்டமிட்டனர் என்பதைக் காட்டும் ஆதாரங்கள் அவசியமாகும். இவ்வழக்கில், ஆய்வு அறிக்கைகள் மற்றும் விசாரணை அறிக்கைகளில் முறைகேடுகள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதே தவிர, எதிரிகள் அனைவரும் இணைந்து செயல்பட்டனர் அல்லது ஒருவருக்கொருவர் உடன்பட்டு குற்றச்செயலை மேற்கொண்டனர் என்பதற்கான உறுதியான ஆதாரம் எதுவும் இல்லை.

**45.** அதேபோல், பிரிவு 408–ன் கீழ், சங்கத்தின் பணம் அல்லது சொத்து எதிரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது என்பதையும், அந்த நம்பிக்கை நிலையை அவர்கள் தவறாக பயன்படுத்தி தனிப்பட்ட முறையில் கையாடல் செய்தனர் என்பதையும் அரசு தரப்பு நிரூபிக்க வேண்டும். ஆனால், இவ்வழக்கில் பணம் அல்லது கடன் தொகை உண்மையில் யாரால் பெறப்பட்டது, யாருடைய கட்டுப்பாட்டிற்கு சென்றது, எதிரிகள் தனிப்பட்ட முறையில் பயன்படுத்தினர் என்பதைக் காட்டும் வங்கி பதிவுகள், பணப்பட்டுவாடா ஆவணங்கள், ரசீதுகள் அல்லது பிற முதன்மை ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

**46.** பிரிவு 468–ன் கீழ், ஏமாற்றும் நோக்கத்துடன் போலி ஆவணத்தை உருவாக்கியிருக்க வேண்டும். பிரிவு 471–ன் கீழ், போலியானது என்று அறிந்தும் அல்லது அறியத்தக்க நிலையிலும் அத்தகைய போலி ஆவணத்தை உண்மையானது போல் பயன்படுத்தியிருக்க வேண்டும். பிரிவு 477(A)–ன் கீழ், கணக்குப் புத்தகங்கள் அல்லது நிதிப் பதிவுகளில் வேண்டுமென்றே பொய்யான பதிவு செய்தல், மாற்றம் செய்தல், நீக்குதல் அல்லது கணக்குகளை மோசடியான நோக்கத்துடன் திரித்தல் நிரூபிக்கப்பட வேண்டும். இம்மூன்று குற்றங்களின் பொதுவான மற்றும் இன்றியமையாத அடிப்படை, போலியானது அல்லது திருத்தம் செய்யப்பட்டதாகக் கூறப்படும் குறிப்பிட்ட ஆவணங்கள் மற்றும் கணக்குப் பதிவுகள் நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்பட்டு, அவற்றின் தன்மை மற்றும் உள்ளடக்கம் சட்டப்படி நிரூபிக்கப்படுவதாகும்.

**47.** ஆனால், இவ்வழக்கில் அரசு தரப்பு போலியானவை என்று குற்றஞ்சாட்டியுள்ள உறுப்பினர் சேர்க்கை விண்ணப்பங்கள், உறுப்பினர்

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:15:55 +0530

சேர்க்கை அனுமதி பதிவேடு, கடன் மனுக்கள், கடன் ஒப்புதல் நடவடிக்கைப் பதிவுகள், கடன் பத்திரங்கள், நில அடமான ஆவணங்கள், பணப்பட்டுவாடா பதிவேடுகள், பணம் பெற்றதற்கான ரசீதுகள், பற்றுச்சீட்டுகள், ரொக்கப் புத்தகம், நாளேடு மற்றும் பொய்யான பதிவுகள் செய்யப்பட்டதாகக் கூறப்படும் அசல் கணக்குப் புத்தகங்கள் ஆகியவற்றில் எதனையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மேலும், எந்த ஆவணம் யாரால் போலியாக உருவாக்கப்பட்டது, எந்தப் பதிவில் என்ன மாற்றம் செய்யப்பட்டது, எந்தக் கையொப்பம் போலியானது, எந்த ஆவணத்தை எதிரிகள் உண்மையானது போல் பயன்படுத்தினர் என்பன குறித்தும் முதன்மை ஆவணங்கள் மூலம் நிரூபிக்கப்படவில்லை.

**48.** இவ்வழக்கில் அரசு தரப்பு பெரும்பாலும் 100% ஆய்வுக் குழு அறிக்கை, கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் பிரிவு 81–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட விசாரணை அறிக்கை, குறைபாடுகள் தொகுப்பு அறிக்கை மற்றும் வாய்மொழிச் சாட்சிகளையே நம்பியுள்ளது. இவ்வறிக்கைகள் நிர்வாக ரீதியாக தயாரிக்கப்பட்டவை என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. எனினும், அவை தாங்களே குற்றச்சாட்டின் முதன்மை ஆதாரங்களாக மாறிவிட முடியாது. அவற்றில் பதிவு செய்யப்பட்டுள்ள முடிவுகள் எந்த அசல் ஆவணங்களின் அடிப்படையில் எட்டப்பட்டன என்பதை நீதிமன்றம் தனியாக பரிசோதித்து உறுதிப்படுத்த வேண்டியது அவசியமாகும். ஆனால், அவ்வாறான அசல் ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாததால், ஆய்வு அறிக்கைகளில் பதிவு செய்யப்பட்டுள்ள கருத்துகள் மற்றும் முடிவுகளை நீதிமன்றம் தனித்து பரிசீலனை செய்ய இயலவில்லை.

**49.** மேலும் பிரிவு 468–ன் கீழ் குற்றம் நிரூபிக்கப்பட வேண்டுமெனில், போலியாக உருவாக்கப்பட்டதாகக் கூறப்படும் குறிப்பிட்ட ஆவணத்தை நீதிமன்றம் நேரடியாகப் பரிசீலித்து, அதன் உள்ளடக்கம், கையொப்பம், திருத்தங்கள், இடைச்செருகல்கள், அழிப்புகள் அல்லது பிற போலித்தனமான அம்சங்களை மதிப்பீடு செய்ய இயல வேண்டும். ஆனால், அத்தகைய

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:16:02 +0530

ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாத நிலையில், போலி ஆவணம் உருவாக்கப்பட்டது என்ற அடிப்படை கூற்று நிரூபிக்கப்படவில்லை.

**50.** அதேபோல், பிரிவு 471–ன் கீழ் குற்றம் நிரூபிக்கப்படுவதற்கு முன், பயன்படுத்தப்பட்ட ஆவணம் உண்மையில் ஒரு போலி ஆவணம் என்பதை அரசு தரப்பு முதலில் நிரூபிக்க வேண்டும். அதன்பின் மட்டுமே அந்த ஆவணத்தை எதிரிகள் உண்மையானது போல் பயன்படுத்தினார்களா, அதைப் பயன்படுத்தியபோது அது போலியானது என்பது அவர்களுக்குத் தெரிந்திருந்ததா அல்லது அறியத்தக்க நிலையிலிருந்தார்களா என்ற கேள்வி எழும். இவ்வழக்கில், போலியானது என்று கூறப்படும் எந்த ஆவணமும் நீதிமன்றத்தின் முன் சமர்ப்பிக்கப்படாத நிலையில், அந்த அடிப்படை உண்மையே நிரூபிக்கப்படாததால், பிரிவு 471–ன் கீழான குற்றச்சாட்டும் சட்டப்படி நிலைநிறுத்தப்பட முடியாது.

**51.** அதேவிதமாக, பிரிவு 477(A)–ன் கீழ் கணக்குகளில் பொய்யான பதிவு செய்தல் அல்லது கணக்குகளை மோசடியான நோக்கத்துடன் மாற்றியமைத்தல் குற்றமாகும். எனவே, பொய்யான பதிவு செய்யப்பட்டதாகக் கூறப்படும் அசல் கணக்குப் புத்தகங்கள், பேரேடுகள், ரொக்கப் புத்தகங்கள், நாளேடுகள் அல்லது தொடர்புடைய நிதிப் பதிவுகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, அவற்றில் உள்ள பதிவுகள் எவ்வாறு தவறாக செய்யப்பட்டன என்பதை ஆதாரங்களுடன் நிரூபிக்க வேண்டியது அவசியம். ஆனால், இவ்வழக்கில் அத்தகைய அசல் கணக்குப் பதிவுகள் தாக்கல் செய்யப்படவில்லை. வெறும் ஆய்வு அறிக்கைகளில் "பொய்யான பதிவு செய்யப்பட்டுள்ளது" என்று குறிப்பிடப்பட்டிருப்பதன் அடிப்படையில் மட்டும் பிரிவு 477(A)–ன் கீழ் குற்றம் நிரூபிக்கப்பட்டதாகக் கருத இயலாது.

**52.** இவ்வழக்கில் அத்தகைய முதன்மை ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படாத நிலையில், ஆய்வு அறிக்கைகள், விசாரணை அறிக்கைகள் மற்றும் வாய்மொழிச் சாட்சிகளை மட்டும்

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:16:08 +0530

அடிப்படையாகக் கொண்டு, எதிரிகள் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 120(B), 408, 467, 468, 471 மற்றும் 477(A) ஆகியவற்றின் இன்றியமையாத கூறுகளை அரசு தரப்பில் நிரூபணம் செய்யவில்லை. மேலும் எதிரிகள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்துள்ளனர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்ய இயலாது. எனவே, இக்குற்றச்சாட்டுகளின் அடிப்படை கூறுகளை நிரூபிப்பதில் அரசு தரப்பு தவறியுள்ளது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

முடிவாக, 2, 3, 5, 6, 7, 10, 11-ம் எதிரிகள் பிரிவுகள் 120B, r/w 408 and 408, 467, 468, 477(A), 471 r/w 109 IPC-ன் கீழும், 15 மற்றும் 17-ம் எதிரி பிரிவுகள் 406, 408, 420, 468, 477(A), 471 IPC-ன் கீழும் குற்றவாளிகள் என்று அரசு தரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்களின் மூலம் எவ்வித சந்தேகங்களுக்கும் அப்பாற்பட்டு இவ்வழக்கில் நிரூபிக்கப்படவில்லை என்பதால் எதிரிகள் மேற்படி பிரிவுகளின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மானிக்கப்பட்டு மேற்படி பிரிவுகளிலிருந்து எதிரிகளை கு.வி.மு.ச பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும், 1, 4, 8, 9, 12, 13, 14 மற்றும் 16-ம் எதிரிகள் இறந்துவிட்ட காரணத்தினால் அவர்கள் மீதான குற்றச்சாட்டு அற்றுப்போய்விட்டது.

எதிரிகளின் பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு ரத்துச்செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் வழக்குச் சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. அதனால் வழக்குச் சொத்துப் பற்றி உத்தரவு பிறப்பிக்கப்படவில்லை.

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:16:15 +0530

இந்த தீர்ப்புரை என்னால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டபின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்த பின்பு 2026–ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09–ஆம் நாள் ஆகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:16:21 +0530

நீதித்துறை நடுவர் எண்.2.
திண்டிவனம்.

**<u>பிற்சேர்க்கை.</u>**

**<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>**

| Prosecution Witness Number | Name of the Witness | Description |
|---|---|---|
| 1 | திரு. சுப்பரமணியம் | புகார்தாரர் |
| 2 | திரு. முத்துகுமாரப்பன் | அறிக்கைகள் சமர்பித்த சாட்சி |
| 3 | திரு. சக்திவேல் | அறிக்கைகள் சமர்பித்த சாட்சி |
| 4 | திரு. ஆரோக்கியராஜ் | விசாரணை அறிக்கை சமர்பித்த சாட்சி |
| 5 | திரு. இளங்கோ | மூன்று தனி அறிக்கைகள் அளித்த சாட்சி |
| 6 | திரு. கிருஷ்ணமூர்த்தி | மத்திய கூட்டுறவு வங்கிக்கு புகார் செய்த சாட்சி |
| 7 | திரு. குமார் | அறிக்கை சமர்பித்த சாட்சி |
| 8 | திரு. துரை | கையாடல் செய்துள்ளது பற்றி கூறும் சாட்சி |
| 9 | திரு. சுந்தரமூர்த்தி | பொய் கணக்கு எழுதி கையாடல் செய்துள்ளதை கூறும் சாட்சி |
| 10 | திரு. விநாயகம் | காவல் ஆய்வாளர் |
| 11 | திரு. பன்னீர்செல்வம் | காவல் துணை கண்காணிப்பாளர் |
| 12 | திரு. ராமு | காவல் துணை கண்காணிப்பாளர் |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:16:28 +0530

**அரசு தரப்பு சான்றாவணங்கள் பட்டியல்**

| Exhibit Number | Description of the Exhibit | Proved by/Attested by |
|---|---|---|
| 1. | 17.12.2004 அன்று 100% ஆய்வு குழுவின் முதல் நிலை அறிக்கை | அ.சா.1 |
| 2. | விசாரணை அதிகாரியை நியமிக்க உத்தரவு வழங்கிய அறிக்கை | அ.சா.1 |
| 3. | விசாரணை அறிக்கை | அ.சா.1 |
| 4. | விசாரணை அறிக்கை பேரில் வணிக குற்றப் புலனாய்வு பிரிவிற்கு அனுப்பப்பட்ட புகார் | அ.சா.1 |
| 5. | 02.12.2004 ல் தாக்கல் செய்த குறைபாடுகள் குறித்த தொகுப்பு அறிக்கை | அ.சா.2 |
| 6. | இனம் 1ல் பக்கம் 25 முதல் 35 வரை உள்ள கடன் விவரங்கள் | அ.சா.2 |
| 7. | இனம் 1ல் பக்கம் 57 முதல் 63 வரை உள்ள கடன் விவரங்கள் | அ.சா.2 |
| 8. | பக்கம் 65ல் சிட்டா இல்லாமல் கடன் வழங்கியது தொடர்பான அறிக்கை | அ.சா.2 |
| 9. | 17.12.2004 அன்று தாக்கல் செய்த குறைபாடுகள்தொகுப்பு அறிக்கை | அ.சா.2 |
| 10. | 370 நபர்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட கடன் வழங்கப்பட்ட விவரங்களின் அறிக்கை (பக்கம் 3 முதல் 85 வரை) | அ.சா.2 |
| 11. | சங்க செயலாளர் மீது குற்றவியல் நடவடிக்கை தொடரவேண்டி தமிழ்நாடு கூட்டுறவு சங்க சட்டப்பிரிவு 81(சு)–ன் கீழ் வழக்கு பதிய அனுமதி கோரிய அறிக்கை | அ.சா.4 |
| 12. | ஆவணங்களில் கண்ட குற்றமுறு செயல்கள் சம்பந்தப்பட்ட சாட்சிகள் 400 பேர்களை விசாரித்து பதிவு செய்த வாக்குமூலங்கள் | அ.சா.4 |
| 13. | பிரம்மதேசம் தொடக்க வேளாண்மை வங்கியானது 26.06.1970 இல் பதிவு செய்யப்பட்டு 28.06.1970 முதல் செயல்பட தொடங்கியதற்கான துணை விதி | அ.சா.4 |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:16:35 +0530

| | | |
|---|---|---|
| | நகல். | |
| 14. | கேசவபிள்ளையுடைய கடன் குறிப்பு | அ.சா.4 |
| 15. | வெங்கட சுப்புவின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 16. | ஏழுமலையின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 17. | கிருஷ்ணனின் கடன்குறிப்பு | அ.சா.4 |
| 18. | பாலசுப்பிரமணியின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 19. | மாரிக்கவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 20. | லோகாம்பாள் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 21. | கிளியம்மாள் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 22. | ஜெயராமபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 23. | சுப்ரமணியநாயுடு என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 24. | அரிராகவன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 25. | கோவிந்தராஜ் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 26. | ராதாகிருஷ்ணன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 27. | ஏழுமலை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 28. | ஏழுமலை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 29. | கணேசன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 30. | நாதமுனி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 31. | முத்துகிருஷ்ணன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 32. | வாசுதேவன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 33. | பெருமாள் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 34. | முருகேசன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 35. | சஞ்சீவிநாயுடு என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 36. | சிவகண்டன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 37. | குமார் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 38. | ரங்கநாதன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 39. | சுப்பிரமணியன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 40. | ஆறுமுகம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 41. | பாண்டுரங்கப்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:16:41 +0530

| | | |
|---|---|---|
| 42. | ஜெயபால்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 43. | மணிகண்டன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 44. | தங்கராஜ் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 45. | தாமோதரன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 46. | நாச்சியப்பன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 47. | தமிழ்செல்வம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 48. | அர்ச்சுனகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 49. | முனுசாமிபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 50. | கண்ணபிரான் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 51. | ஜானகிராமன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 52. | அலமேலு என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 53. | மாணிக்க அம்மாள் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 54. | அன்னம்மாள் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 55. | ரங்கநாதன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 56. | அலமேலு என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 57. | எத்திராஜ் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 58. | ராமமூர்த்தி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 59. | ராமசந்திர ரெட்டியார் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 60. | ஜெயபால்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 61. | பாவாடை ஆச்சாரி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 62. | வேணுபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 63. | கலைச்செல்வி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 64. | குப்பம்மாள் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 65. | வாசுதேவன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 66. | குப்பம்மாள் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 67. | பெரியசாமிபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 68. | பெரியசாமிபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 69. | ஆறுமுகம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 70. | கிருஷ்ணவேணி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:16:47 +0530

| | | |
|---|---|---|
| 71. | பாலு என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 72. | வசந்தா அம்மாள் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 73. | சுப்ரமணி அய்யர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 74. | கலா என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 75. | துளசிலிங்கம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 76. | தட்சிணாமூர்த்திகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 77. | ராமதாஸ் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 78. | கண்ணுதுரை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 79. | ராஜகுமாரி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 80. | மஞ்சினிகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 81. | ராமதாஸ் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 82. | ஏழுமலை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 83. | ஆறுமுகம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 84. | பாண்டுரங்கப்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 85. | நடேசகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 86. | குமார் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 87. | விஜயபாபு என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 88. | முருகேசகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 89. | கண்ணன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 90. | குப்புசாமி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 91. | மணிவண்ணப்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 92. | காளிதாஸ் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 93. | கிருஷ்ணவேணி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 94. | மஞ்சிகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 95. | ஜெயச்சந்திரன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 96. | ராஜசேகரன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 97. | ஜெயபால்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 98. | கந்தசாமிகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 99. | கிருஷ்ணமூர்த்தி நாயுடு என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:16:53 +0530

| | | |
|---|---|---|
| 100. | தட்சிணாமூர்த்தி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 101. | முனுசாமிபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 102. | கிருஷ்ணமூர்த்தி நாயுடு என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 103. | கார்த்திகேயன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 104. | தமிழ்செல்வன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 105. | வேணுபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 106. | லோகநாதபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 107. | அப்பாசாமி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 108. | அறிவழகன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 109. | கண்ணன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 110. | லஷ்மிநாராயணரெட்டியார் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 111. | ராதாகிருஷ்ணன்என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 112. | ஆறுமுககவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 113. | மணிவண்ணப்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 114. | ஆறுமுகம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 115. | கோதாண்டராமன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 116. | சரோஜா என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 117. | அன்னம்மாள் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 118. | சின்னசாமி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 119. | மணி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 120. | ராஜேஸ்வரி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 121. | ஏழுமலை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 122. | எத்திராஜ் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 123. | பாலு என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 124. | சுந்தரமூர்த்தி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 125. | முத்துகிருஷ்ணன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 126. | புருஷோத்தம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 127. | தேவநாதன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:17:01 +0530

| | | |
|---|---|---|
| 128. | அரிராகவன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 129. | முனுசாமிபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 130. | விஸ்வநாத முதலியார் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 131. | ராமபத்திரன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 132. | பெருமாள் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 133. | சரோஜா என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 134. | காளியப்பன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 135. | சுந்தரம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 136. | சீத்தாராமன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 137. | வேம்பன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 138. | பெரியசாமி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 139. | நாச்சியப்பன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 140. | வாசுதேவன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 141. | கனகராசுகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 142. | கணேசகவுண்டர்என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 143. | பெருமாள்கவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 144. | பலராமன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 145. | பாலகிருஷ்ணன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 146. | முனுசாமிபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 147. | உசேன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 148. | நடராஜ் நாயுடு என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 149. | சோலையபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 150. | கோதாண்டராமன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 151. | வடிவேல் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 152. | சுதா என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 153. | கண்ணகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 154. | சதாசிவம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 155. | ராஜாராம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 156. | சடகோபன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:17:08 +0530

| | | |
|---|---|---|
| 157. | தாமோதிரன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 158. | ராஜேந்திரன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 159. | கண்ணபிரான் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 160. | சாமிகண்ணுபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 161. | தமிழ்செல்வி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 162. | ராணி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 163. | அரிராகவன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 164. | வெங்கடேசன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 165. | விஜயபாபு என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 166. | பத்மாசனி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 167. | சுப்ரமணி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 168. | சீனுவாசன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 169. | ஏழுமலை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 170. | வேல்முருகன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 171. | பழனி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 172. | குப்புசாமிபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 173. | சடகோபன்ரெட்டியார் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 174. | பாலகிருஷ்ணன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 175. | ராஜாராம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 176. | சாமிகண்ணுபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 177. | ராமச்சந்திரன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 178. | சுப்ரமணிகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 179. | உலகநாதன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 180. | சின்னையன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 181. | குள்ளகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 182. | தாமோதிரன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 183. | மண்ணாதகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 184. | அப்பாசாமி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 185. | அன்னம்மாள் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:17:14 +0530

| | | |
|---|---|---|
| 186. | நாகலட்சுமி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 187. | எல்லப்பன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 188. | கண்ணன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 189. | மணி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 190. | செல்வமணி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 191. | ரமேஷ் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 192. | வரதராஜ கவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 193. | நவசிவம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 194. | தருமலிங்கம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 195. | கலா என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 196. | தங்கராஜ் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 197. | ராமசாமி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 198. | கோதாண்டம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 199. | நமச்சசிவாயம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 200. | குமாரகிருஷ்ணன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 201. | லஷ்மிநாராயணரெட்டியார் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 202. | முத்துகிருஷ்ணன்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 203. | ஜெயராமன்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 204. | ராதாகிருஷ்ணன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 205. | ஜானகிராமன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 206. | மாசிலாமணி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 207. | தனசேகரன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 208. | துளசிலிங்கக்ம என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 209. | ரகுபதி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 210. | பாலசுப்ரமணி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 211. | கிளியம்மாள் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 212. | காத்தவராயப்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:17:22 +0530

| | | |
|---|---|---|
| 213. | நாராயணசாமி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 214. | கோதாண்டராமன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 215. | முருகேசகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 216. | மரியசூசை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 217. | சுந்தரமூர்த்தி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 218. | சுந்தரமூர்த்தி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 219. | வசந்தா என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 220. | மணிவண்ணன்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 221. | ஜெகநாதன் ரெட்டியார் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 222. | மாணிக்கம்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 223. | பத்மாசனி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 224. | தேவராஜ் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 225. | பன்னீர்செல்வம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 226. | சீனுவாச கவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 227. | கலைச்செல்வி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 228. | கன்னியப்பன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 229. | கிருஷ்ணமூர்த்தி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 230. | ராஜலட்சுமி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 231. | சுந்தரம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 232. | பரசுராமன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 233. | மணிவண்ணன்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 234. | ஏழுமலை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 235. | ஏழுமலை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 236. | ஜெயராமநாயுடு என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 237. | நாகரத்தினம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 238. | ராமலிங்கம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 239. | பலராமன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 240. | ராஜேந்திரன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:17:29 +0530

| | | |
|---|---|---|
| 241. | கண்ணன்கவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 242. | ஞானசேகரன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 243. | கஸ்தூரி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 244. | வனதாட்சி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 245. | கேசவன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 246. | கண்ணன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 247. | நாராயணசாமிரெட்டியார் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 248. | பெரியசாமி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 249. | ராஜகுமாரி என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 250. | ராதாகிருஷ்ணபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 251. | திருநாவுக்கரசு என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 252. | பாண்டுரங்கன்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 253. | அன்னம்மாள் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 254. | ஏழுமலை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 255. | வேல்முருகன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 256. | ஆறுமுகம்கவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 257. | ராஜாராம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 258. | வசந்தா என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 259. | சீனுவாசன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 260. | பெரியகவுண்டர் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 261. | வேம்பன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 262. | நாராயணசாமிரெட்டியார் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 263. | ரங்கநாதபிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 264. | காளிதாஸ் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 265. | சுப்புராயன் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 266. | பக்தவச்சலம் என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 267. | சஞ்சீவிநாயுடு என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 268. | சோலையப்பிள்ளை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |
| 269. | துரை என்பவரின் கடன் குறிப்பு | அ.சா.4 |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:17:35 +0530

| | | |
|---|---|---|
| 270. | 1303 ரவி எஸ் எம் கடன்.100 27.06.2004, ரூ. 21,000/- குறிப்பு | அ.சா.4 |
| 271. | 107 நடேசகவுண்டர் பிளப் கடன் எண். 407 27.06.2004, ரூ.14,000/- குறிப்பு | அ.சா.4 |
| 272. | 1240 ராமதாஸ் கடன் எண். 1146 28.06.2004, ரூ. 45,000/- கடன் | அ.சா.4 |
| 273. | 497 விஸ்வநாத முதலியார் கடன் எண். 707, 30.06.2004, ரூ. 20,000/- | அ.சா.4 |
| 274. | 794 ஏகாம்பரம் என்பவரின் கடன் எண். 463 30.06.2004, ரூ. 00,000/- குறிப்பு | அ.சா.4 |
| 275. | 893 ஐயோத்தி என்பவரின் கடன் எண். 830, 30.06.2004<br>ரூ. 18,000/- குறிப்பு | அ.சா.4 |
| 276. | 1033 கண்ணுதுரை என்பவரின் கடன் எண். 151 30.06.2004 ரூ. 22,000/- | அ.சா.4 |
| 277. | 1035 ரங்கநாதன் என்பவரின் கடன் எண்.879 30.06.2004, ரூ. 17,000/- | அ.சா.4 |
| 278. | 1042 ராமச்சந்திரன் என்பவரின் கடன் எண். 883 30.06.2004 ரூ. 17,000/- | அ.சா.4 |
| 279. | 1049 குள்ளகவுண்டர் என்பவரின் கடன் எண். 765 30.06.2004 ரூ. 15,000/- | அ.சா.4 |
| 280. | 1065 ஜெயராமநாயுடு என்பவரின் கடன் எண்.402 30.06.2004 ரூ. 17,000/- | அ.சா.4 |
| 281. | 1221ஆதிமூலகவுண்டர் என்பவரின் கடன் எண். 662 30.6.2004 ரூ. 19,000/-குறிப்பு | அ.சா.4 |
| 282. | 1112குப்புசாமி என்பவரின் கடன் எண். 324 30.06.2004 ரூ. 14,500/- | அ.சா.4 |
| 283. | வரிசை எண். 294 உறுப்பினர் 1309 பெயர் ராஜாராம் கடன் எண். 171 30.06.2004, ரூ.21,000/- கடன் பேரேடு பக்கம் 43 | அ.சா.4 |
| 284. | வரிசை எண். 295 உறுப்பினர் 1336 பெயர் நாகரத்தினம் கடன் எண். 58 30.06.2004, ரூ.7,500/- கடன் பேரேடு பக்கம் 115 | அ.சா.4 |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:17:42 +0530

| | | |
|---|---|---|
| 285. | வரிசை எண். 296 உறுப்பினர் 1359 பெயர் ஜெயராமபிள்ளை, சிறுவிவசாயி கடன் எண். 154 30.06.2004, ரூ.17,000/- கடன் பேரேடு பக்கம் 9 | அ.சா.4 |
| 286. | வரிசை எண். 297 உறுப்பினர் 1384 பெயர் நமச்சிவாயம் கடன் எண். 379 30.06.2004, ரூ.10,000/- கடன் பேரேடு பக்கம் 161 | அ.சா.4 |
| 287. | வரிசை எண். 298 உறுப்பினர் 1462 பெயர் ஆண்டாள் கடன் எண். 609 30.06.2004, ரூ.20,000/- கடன் பேரேடு பக்கம் 15 | அ.சா.4 |
| 288. | வரிசை எண். 299 உறுப்பினர் 1549 பெயர் சிவகண்டன் கடன் எண். 484 30.06.2004, ரூ.20,000/- கடன் பேரேடு பக்கம் 67 | அ.சா.4 |
| 289. | வரிசை எண். 302 உறுப்பினர் 1649 பெயர் ஜகனாதன் கடன் எண். 871 30.06.2004, ரூ.50,000/- கடன் பேரேடு பக்கம் 227 | அ.சா.4 |
| 290. | வரிசை எண். 303 உறுப்பினர் 1029 பெயர் முனுசாமிபிள்ளை கடன் எண். 316 14.08.2004, ரூ.31,200/- கடன் பேரேடு பக்கம் 29 | அ.சா.4 |
| 291. | வரிசை எண். 304 உறுப்பினர் 28 பெயர் புருஷோத்தம ரெட்டியார் கடன் எண். 175 09.03.2004, ரூ.64,000/- கடன் பேரேடு பக்கம் 47 | அ.சா.4 |
| 292. | வரிசை எண். 305 உறுப்பினர் 814 பெயர் தட்சணாமூர்த்தி கவுண்டர் கடன் எண். 400 09.03.2004, ரூ.65,000/- கடன் பேரேடு பக்கம் 197 | அ.சா.4 |
| 293. | வரிசை எண். 306 உறுப்பினர் 1236 பெயர் குப்பம்மாள் கடன் எண். 332 09.03.2004, ரூ.42,000/- கடன் பேரேடு பக்கம் 61 | அ.சா.4 |
| 294. | வரிசை எண். 307 உறுப்பினர் 980 பெயர் சீத்தாராம கவுண்டர் கடன் எண். 144 10.03.2004, ரூ.29,000/- கடன் பேரேடு பக்கம் 207 | அ.சா.4 |
| 295. | வரிசை எண். 308 உறுப்பினர் 926 பெயர் அரிவழகன் கடன் எண். 10 10.06.2004, ரூ.21,000/- கடன் பேரேடு பக்கம் 19 | அ.சா.4 |
| 296. | வரிசை எண். 309 உறுப்பினர் 1074 பெயர் | அ.சா.4 |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:17:49 +0530

| | | |
|---|---|---|
| | பொன்னுசாமி கடன் எண்.494 10.06.2004, ரூ.27,000/- கடன் பேரேடு பக்கம் 93 | |
| 297. | வரிசை எண். 310 உறுப்பினர் 1391 பெயர் குப்புசாமி கடன் எண். 64 10.06.2004, ரூ.21,000/- கடன் பேரேடு பக்கம் 127 | அ.சா.4 |
| 298. | வரிசை எண். 311 உறுப்பினர் 518 பெயர் பெருமாள் கவுண்டர் கடன் எண். 906 10.06.2004, ரூ.32,000/- கடன் பேரேடு பக்கம் 299 | அ.சா.4 |
| 299. | வரிசை எண். 312 உறுப்பினர் 805 ஏ பெயர் ஜெயச்சந்திரன் கடன் எண். 406 10.06.2004, ரூ.64,000/- கடன் பேரேடு பக்கம் 209 | அ.சா.4 |
| 300. | வரிசை எண். 313 உறுப்பினர் 995 பெயர் ரங்கநாதன் கடன் எண். 352 10.06.2004, ரூ.55,000/- கடன் பேரேடு பக்கம் 101 | அ.சா.4 |
| 301. | வரிசை எண். 314 உறுப்பினர் 1185 பெயர் பாலு கடன் எண். 19 10.06.2004, ரூ.35,000/- கடன் பேரேடு பக்கம் 37 | அ.சா.4 |
| 302. | வரிசை எண். 315 உறுப்பினர் 1216 பெயர் அலமேலு கடன் எண். 5286 10.06.2004, ரூ.6,000/- கடன் பேரேடு பக்கம் 149 | அ.சா.4 |
| 303. | வரிசை எண். 316 உறுப்பினர் 1279 பெயர் தாமோதரன் கடன் எண். 73 10.06.2004, ரூ.19,000/- கடன் பேரேடு பக்கம் 145 | அ.சா.4 |
| 304. | வரிசை எண். 317 உறுப்பினர் 1045 பெயர் தேவகி பெரு விவசாய கடன், கடன் எண். 78 10.06.2004, ரூ.53,000/- கடன் பேரேடு பக்கம் 155 | அ.சா.4 |
| 305. | வரிசை எண். 318 உறுப்பினர் 1593 பெயர் மணிகண்டன் கடன் எண்.210 10.06.2004, ரூ.50,000/- கடன் பேரேடு பக்கம் 117 | அ.சா.4 |
| 306. | வரிசை எண். 319 உறுப்பினர் 835 பெயர் கணேச கவுண்டர், கடன் எண். 35 11.06.2004, ரூ.21,000/- கடன் பேரேடு பக்கம் 69 | அ.சா.4 |
| 307. | வரிசை எண். 320 உறுப்பினர் 1334 பெயர் லோகநாதபிள்ளை கடன் எண். 494, 11.06.2004, | அ.சா.4 |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:17:55 +0530

| | | |
|---|---|---|
| | ரூ.20,000/- கடன் பேரேடு பக்கம் 87 | |
| 308. | வரிசை எண். 321 உறுப்பினர் 423 பெயர் கந்தசாமி கடன் எண். 909 11.06.2004, ரூ.32,000/- கடன் பேரேடு பக்கம் 305 | அ.சா.4 |
| 309. | வரிசை எண். 322 உறுப்பினர் 901 பெயர் நாச்சியப்பன் கடன் எண்.46 11.06.2004, ரூ.40,500/- கடன் பேரேடு பக்கம் 91 | அ.சா.4 |
| 310. | வரிசை எண். 323 உறுப்பினர் 1530 பெயர் வேலாயுதம் கடன் எண். 89 11.06.2004, ரூ.50,000/- கடன் பேரேடு பக்கம் 177 | அ.சா.4 |
| 311. | வரிசை எண். 324 உறுப்பினர் 1666 பெயர் ரவி கடன் எண். 850 12.06.2004, ரூ.41,400/- கடன் பேரேடு பக்கம் 185 | அ.சா.4 |
| 312. | சட்டப்பிரிவு 81 ன் கீழ் விசாரணை அலுவலரிடம் அளித்த வாக்குமூலத்தில் மேற்கண்ட அங்கத்தினர்கள் தங்கள் பெயரில் கடன் உள்ளது என தெரியாது என்றும், கடனை முடிவுகட்டிய பின் பெறவில்லை எனவும் அளித்த வாக்குமூலங்கள் | அ.சா.4 |
| 313. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.10 |
| 314. | பிரிவு மாறுதல் அறிக்கை மற்றும் எதிரி நீக்கல் அறிக்கை | அ.சா.12 |

**<u>அரசு தரப்பு சான்றுபொருள் –</u> இல்லை.**

**<u>எதிரி தரப்பு சாட்சிகள்</u>**

| Defence Side Witness Number | Name of the Accused | Description |
|---|---|---|
| 1 | திரு.வீரன் | 5-வது எதிரி |
| 2 | திரு.பிரபாகரன் | 10-வது எதிரி |

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:18:05 +0530

**எதிரி தரப்பு சான்றாவணங்கள் பட்டியல்**

| Exhibit Number | Description of the Exhibit | Proved by/Attested by |
|---|---|---|
| 1 | 10.07.2024 ல் பிறப்பிக்கப்பட்ட மேல்முறையீட்டு நீதிபேராணை உத்தரவு | அ.சா.1 |
| 2 | 29.07.2019 ல் W.P.No. 10/2010 to 14/2010 –ன் படி தண்ட வசூல் நடவடிக்கையை கூட்டாக எடுக்க முடியாது என்று தீர்ப்பு உத்தரவு நகல் | எ.சா.1 |
| 3 | இனம் 1 மற்றும் 8 ல் எ.சா.2 எந்த இழப்பீடும் ஏற்படுத்தவில்லை என்று முடிவு செய்யப்பட்டு அதற்கான சான்றிட்ட நகல் | எ.சா.2 |

**எதிரி தரப்பு சான்றுபொருள்– இல்லை.**

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.07.09 15:18:31 +0530

நீதித்துறை நடுவர் எண் 2.
திண்டிவனம்